


# மகாவலியின் மைந்தன்

கேணிப்பித்தன்
ச.அருளானந்தம்

மகுடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாவலியின்
# மைந்தன்

**சிறுவர் நாவல்**

**கேணிப்பித்தன் ச.அருளானந்தம்**

வெளியீட்டு உரிமை

**அருள் வெளியீடு**

பதிப்பு

**மகிடம்**

இல.90, பார்வீதி,

மட்டக்களப்பு 30000

இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகுடம் பதிப்பக வெளியீடு - 76
ISBN : 978-624-5849-48-2

நூல் : மகாவலியின் மைந்தன் ● வகை : சிறுவர் நாவல் ● ஆசிரியர் : கேணிப்பித்தன் ச. அருளானந்தம் ● உரிமை : ஆசிரியருக்கு ● முதல் பதிப்பு : மார்கழி - 2023 ● பக்கங்கள் - 76 ● வெளியீடு : மகுடம் பதிப்பகம் 90, பார்வீதி, மட்டக்களப்பு. 30000 ● வெளியீட்டு உரிமை - அருள் வெளியீடு - திருமலை ● தொ.பே. இல. 0774338878 ● வடிவமைப்பு : அச்சு - வணசிங்க அச்சகம், மட்டக்களப்பு. ● விலை : 600/=

Book - Mahaweliyin Mainthan ● Author - Kenipithan Arulanantham ● © Author ● First Edition - December-2023 ● Size - 1/8 ● Pages - 76 ● Published by - Magudam Publication. 90, Bar Road, Batticaloa. ● Publication Author - Arul Veliyeedu -Trinco ● Ph.No. 0774338878 ● Book & Cover Design T. Shankar ● email - magudammichael@gmail.com ● Printing - Wanasinghe Printers, Batticaloa ● Price - 600/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மகுடம் பதிப்பகத்தின் 76வது வெளியீடாக ஈழத்தின் முக்கிய படைப்பாளிகளில் ஒருவரும் சிறுவர் இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவருமான கவிஞர் ச. அருளானந்தம் (கவிஞர் கேணிப்பித்தன்) அவர்களின் 'மாகாவலியின் மைந்தன்' என்ற இச் சிறுவர் நாவலை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கடந்த 2022ம்ஆண்டு கவிஞரின் மூன்று நூல்கள் மகுடம் பதிப்பகத்தின் ஊடாக வெளியாகியது. அதில் 'எனது வாழ்க்கை நாடகம்' என்ற அவரது சுய வரலாற்று நாவல் தேசிய சாகித்திய விருதினைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. 'ஆடத் துண்டும் பாடல்', 'செல்லக்கண்ணே கேள்' என்ற தலைப்புகளில் இரண்டு சிறுவர் பாடல் நூல்களும் வெளியாகின.

இவ் வருடம் அவரின் 'மகாவலியின் மைந்தன்' என்ற இச் சிறுவர் நாவல் வெளிவருகின்றது. மிகவும் அற்புதமான ஒரு கருவைச் சுமந்து இந் நாவல் ஆக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களாக இருக்கும்போதே தேசப்பற்றுடன் வாழ வேண்டும் என்பதனை எமது மக்கள், எமது மண் என்ற நிலையில் இக்கதையின் கதாப்பாத்திரங்கள் வாழ்வதை மிக அழகாக வடிவமைத்துள்ளார்.

1505ம் ஆண்டுக்கு பின்னர் எமது மண்ணிற்கு போர்த்துகேயரும் அவர்களைத் தொடர்ந்து ஒல்லாந்தரின் வருகையையும் வரலாற்றுடன் இணைத்து இவர்கள் எமது மண்ணின் மக்களை இணைத்துக் கொண்டு எமது மண்ணை சுபளீகரம் செய்ய முற்பட்டதை தடுக்கும் இளைஞர்களின் போரியல் கதையாக இது வரலாற்றுத் தகவல்களுடன் படைக்கப்பட்டுள்ளது.

அரசும், அரசாங்கங்களும் தமது மக்களின் வறுமையை மிக முக்கியமாக கவனிக்கவேண்டும் என்பதனை இந்நாவலில் அறிந்துகொள்ள முடிகிறது. இல்லாவிட்டால் மக்கள் திசைமாற வாய்ப்பு ஏற்படும் என்பதையும் அதன் காரணமாக அவர்கள் அந்நிய சக்திகளுக்கு விலைபோகும் பரிதாபகரமான நிலை ஏற்படும் என்பதனையும் அறியமுடிகிறது.

பெண் கதாப்பாத்திரமே இல்லாமல் ஒரு சிறுவர் நாவல் முழுமை யாகப் படைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதன் குறை தெரியாமல் வெகு அருமையாக ஆக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர், தம்பலகாமம், கந்தளாய், மகாவலி ஆற்றோரம் என திருகோணமலை மண்ணின் இயற்கை சார்ந்த அழகிய பிரதேசங்களில் நடக்கும் இக்கதையின் மூலம் திருகோணமலை மண்ணை பல இடங்களில் தரிசிக்க முடிகிறது.

இந் நாவலில் நாமும் ஒரு கதாப்பாத்திரமாக வாழ்வது போன்ற உணர்வு இக்கதையைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும் ஏற்படும்.

வரலாற்றுத் தகவல்களுடன் சாகசங்கள் நிறைந்த இந்நாவல் சிறுவர்களை மிகவும் கவரும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

சிறு வயதில் இருந்தே தேசப்பற்றின் அருமையை வளர்த்துவரும் வகையில் அமைந்த இந்நாவலை ஆக்கிய கவிஞர் கேணிப்பித்தன் அவர்களுக்கு எமது வாழ்த்துகள்.

**- மகுடம் வி.மைக்கல் கொலின்**
(ஆசிரியர் - மகுடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கேணிப்பித்தன் .ச.அருளானந்தம் அவர்களது 'சிறுவர் நாவல்கள்' படிப்பவர்களை ஈர்த்தெடுப்பவை. கதைகளுக்குள் சிறுவரைச் சிந்திக்க வைக்கும் செய்திகளைப் புகுத்திவிடுவார். பெரியவர்களையும் சிந்திக்க வைத்து விடுவார். கதை சொல்லும் முறை வாசிப்பவரை யோசிக்க வைக்கும். ஆனால் சிறுவர் ஆக்கங்களை பெற்றோர்களோ, அல்லது ஆசிரியர்களோ சிறார்களுக்கு அறிமுகம் செய்வதில்லை. இது நமது சமூகத்தின் சாபக்கேடு என்று கூடச் சொல்லலாம்.

தனது தகைமையை வெளிச்சொல்லா மாண்பினர். அமைதியாக இருந்து தமிழோடு கல்விப் பணியாற்றுபவர். இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். சிறுவருக்கான கதைகள், பாடல்கள், நாவல்கள். கட்டுரைகள் எழுதுவதில் திருகோணமலை மாவட்டத்தில் முதன்மையானவராகத் திகழ்கிறார். இவரது 'அற்புதமான வானம்' உண்மை யிலேயே அற்புதங்களின் பொக்கிஷமாக விளங்குகிறது. அதனைத் தொடர்ந்து 'சந்திரன் கதை' வெளிவந்தது. இவ்வாறு பல ஆக்கங்களை நிறையவே எழுதி யுள்ளார். சின்னச் சின்ன வசனங்களால் கவர்ச்சியாகக் கதைசொல்லும் பாங்கால் வாசகர்களை ஈர்த்தெடுத்துச் செல்கிறார்.

சிறுவர்களுக்கான நாவல்கள் பல எழுதியுள்ளார். 'பயங்கொள்ளலாகாது பாப்பா' சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது. 'காட்டில் கலவரம்,' 'உல்லாசப் பயணம்', 'பளிங்குத் தீவு' 'மனதில் உறுதிவேண்டும்' '.மாணவர் உலகம்' போன்ற சிறுவர் நாவல்கள் சிறந்த படிப்பினையுடன் வாசிப்பவர்களை யோசிக்க வைப்பன. 'மகாவலியின் மைந்தன்' வரலாற்றினை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. நமது திருகோணமலை மாவட்டத்தின் சூழலை அடிப் படையாகக் கொண்டது. இலங்கையில் தமிழ் அரசர்கள் ஆண்ட வரலாற்றை மகாவம்சம் ஏற்றுள்ளது. தேவநம்பிய தீசன் தமிழ் மன்னன். அவன் சைவ சமயத்தவன். புத்தபெருமானால் பௌத்த சமயத்துக்கு மாற்றப்பட்டவன். அவனது காலத்தில் 53 தமிழ் அரசர்கள் இருந்துள்ளதை மகாவம்சம் கூறுகிறது.

புவிக்கோளம் தோன்றியதிலிருந்து நிலத்திணிவுகள் யாவும் ஒன்றாக இருந்ததற்கான ஆதாரங்கள் நிறையவே உள்ளன. புவியின் அகவிசை, புறவிசை காரணமாக நிலத்திணிவுகள் பிரிந்து இன்றைய நிலையில் உள்ளன என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியியல் ஆராய்ச்சியாளர்கள் விளக்கியுள்ளனர். இதற்கு ஆதரமாக வெகனரின் கண்டநகர்வுக் கொள்கை விளங்குகிறது.

ஆபிரிக்கா தொடக்கம் இந்தியா, அவுஸ்திரேலியா வரை நிலத்திணிவுகள் ஒன்றாக இருந்தன. அடிக்கடி ஏற்பட்ட கடற்கோள்களினால் தாக்கத்துக்கு உள்ளாகியது. இலங்கையை மாகோன் ஆண்ட காலத்தில் பொலன்நறுவை ஜனநாதபுரமாக இருந்தது. திருமங்களாய். தம்பலகாமம், திருகோணமலை பிரதேசங்கள் அவனது ஆளுகைக்குள் இருந்தன. அப்போது மகாவலியை அண்டி பெரியதொரு நாகரிகம் பரவியிருந்தது. அதனை மையமாக வைத்து இந்நாவலை எழுதியுள்ளார் கவிஞர். இந்நூலின் ஆசிரியர் இப்பிரதேசங்களில் பரீட்சையம் உள்ளவர். காடுகளுள் புகுந்து பல வரலாற்றுச் சின்னங்களைப் பார்வையிட்டவர். விஞ்ஞானம் கற்றிருந்தாலும் வரலாற்றில் ஈடுபாடுடையவர். அதனாலேயே இவ்வாறான நூல்களை எழுதக்கூடியதான ஆற்றலைப் பெற்றுள்ளார்.

இவரது கதைகள் யாவும் அன்பு, உண்மை, தன்னம்பிக்கை, அழகு பற்றியதாகவே அமைந்துள்ளன. மனித இனம் உள்ளளவும் புதுப்புதுக் கதைகள் தோன்றத்தான் செய்யும். பல உண்மைகளும் தோற்றம் பெறத்தான் செய்யும். எப்படி இருப்பினும் கலாபூஷணம் திரு.ச.அருளானந்தம் அவர்களின் கதைகள் எம்மைப் பரவசப்படுத்திக் கொண்டுதான் இருக்கும்.

அதிசயிக்கத் தக்க செய்திகளைத் தந்த ஆசிரியர் சிறுவர்களைச் சிந்திக்கவும், இரசிக்கவும் எனப் பல கதைகளையும் தந்துள்ளார். வளர்ந்தோரும் வாசித்துச் சிந்திக்க வேண்டிய நூல் இது. வெளிநாட்டுக் கதைகளை நமது மாணவர்கள் தெரிந்து கொள்ளும் ஆற்றலைப் பெறவேண்டும் என்பது அவரது ஆதங்கமாகும். வாசகர்கள் இவ்வாறான நூல்களை வாங்கிப் படிக்க வேண்டும், எழுதத் தூண்டவும் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**- சைவப்புலவர் கலாபூஷணம் செ.விபுணசேகரம். J.P**

முன்னைநாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்

கட்டைபறிச்சான் - 7 மூதூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலாசிரியர் பற்றி...

திருகோணமலை மாவட்டத்தில் சிறுவர் இலக்கியத்தில் முன்னணியில் திகழும் கலாபூஷணம் கேணிப்பித்தன் ச.அருளானந்தம் நாடறிந்த எழுத்தாளர். சிறுவர்களுக்காகப் பாடல்கள் நிறையவே எழுதியுள்ளார். சிறுவர்களுக்காக கதைகள். நாவல்கள் பல எழுதி வெளியிட்டுள்ளார். இதுவரை ஏழு நூல்களுக்குச் சாகித்திய விருதினைப் பெற்றுள்ளார். முன்னைநாள் வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் மேலதிகக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றபின்னும் எழுதுவதே தனது மூச்சாகக் கொண்டு இன்றுவரை எழுதி வருகிறார்.

கலாநிதி கேணிப்பித்தன் ச. அருளானந்தம் சிறுகதை. நாவல். எனப் பல்துறைகளிலும் ஈடுபாட்டுடன் தடம் பதிப்பவர். இளைஞர் நாவல்கள் எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் இரண்டு நாவல்கள் அகில இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசுகளைப் பெற்றுள்ளார். அவற்றுள் 'வாக்கினிலே இனிமை வேண்டும்' என்ற இளைஞர் நாவல் சிங்கள மொழியில் மொழிமாற்றம் பெற்றுள்ளது. 'கண்ணனும் இராமனும்' என்ற சிறுவர் நூலும் சிங்கள மொழியில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

'மகாவலி மைந்தன்' என்ற இந்தச் சிறுவர் நாவல் பல அற்புதமான கதைக் கருவைக் கொண்டது. வரலாற்றுக் காலத்தை நம் கண்முன் காட்டுகிறார். இக்கதையை வாசிக்கும் போது நாமே களத்தில் நிற்பதாக உணரலாம். திருகோணமலை மாவட்டத்தில் மகாவலி கங்கைக் கழிமுகத்தையும். கொட்டியாபுரக் குடாக்கடல் ஊடாக அந்நியர் நமது நாட்டை தம்வசப்படுத்த முனைவதையும், நாட்டுப் பற்றுள்ள இளைஞர்களும், தலைவர்களும் போராடுவதையும் அழகாகத் தந்துள்ளார். அவரது நூல்களை வாங்கி உற்சாகப் படுத்தி எழுதத் தூண்டுவது நமது தலையாய கடமை என்பதை நினைவில் கொண்டு நூல்களை வாங்குவோம்.

**ஓ.குலேந்திரன்**

முன்னைநாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்
தலைவர், சமூகக் கற்கை நிலையம்
56, மத்திய வீதி, உவர்மலை, திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சிறுவர்களுக்கான நூல்களை எழுதுவது உற்சாகமானது. சிறுவர் களாகவே நாம் மாறி அந்த அற்புத உணர்வுகளைப் பெற்றுவிடுகிறோம். உணர்வுகள் பொங்க நமது உடலில் உற்சாகம் பிறக்கும். எழுத எழுத எண்ணங்கள் வண்ணம் வண்ணமாக அலையலையாக எழுந்து வரும். இவ்வாறுதான் 'அற்புதமான வானம்' என்ற சிறுவர் அறிவியல் நூலை எழுதினேன். அந்நூலைச் சிறந்த அறிவியல் நூலாகத் தேர்ந்தெடுத்து அகில இலங்கை அரச சாஹித்திய விழாவில் விருதும் ஐம்பத்தைந்து ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கிக் கௌரவிக்கப் பட்டேன். இது இலங்கை அரசு சிறுவர் இலக்கியத்துக்குக் காட்டும் கரிசனையைக் காட்டுவதாக நான் நினைந்து கொள்கிறேன். அதே நூல் கிழக்கு மாகாண சாஹித்திய விழாவிலும் பரிசினைப் பெற்றுக் கொண்டது. 'மகாவலி மைந்தன்' என்ற சிறுவருக்கான விறுவிறுப்பான நாவலை எழுதினேன். ஆனால் அதன் கையெழுத்துப் பிரதி அழிந்து விட்டது. எனினும் அதன் நினை வுகளை மனதில் புதுப்பித்து எழுதத் தொடங்கினேன்.

இன்று உங்கள் கைகளில் 'மகாவலியின் மைந்தன்' நூலினை முன்வைத் துள்ளேன். வாசித்துப் பாருங்கள். நமது இளையோர் தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன்னால் பொழுதைக் கழிப்பது வேதனைக்குரியது. வெளிநாடு களில் இளையோர் ஏராளமான நூல்களை வாசிப்பதை நாம் மறந்து விட்டோம். பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு நல்ல நூல்களை வாங்கிக் கொடுக்கின்றார்கள். இந்தியத் தொலைக்காட்சி நமது குடும்த்தின் உறுப்பினர்களையும், இளையோரின் மூளையையும் மழுங்கடிக்கச் செய்கின்றன. சிந்தனையை அவைகள் வளர்க்கத் தடையாக உள்ளன.

ஒரு நாவலை வாசிக்கும்போது வாசிப்பவரின் சிந்தனை பரந்து விரிகின்றது. அந்நூலில் அடங்கியுள்ள கதைகள் வாசிக்கும் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தும். வாசிப்பவர்கள் கற்பனை வானில் பறக்கலாம். இந்நாவலில் வரும் கதாபாத்திரங்களோடு உறவாடலாம். அவர்களாகவே நீங்கள் மாறலாம். அத்துடன் வாசிப்பதால் நாம் சிந்திக்கிறோம். தொலைக்காட்சி நமக்குச் சிந்தனையைத் தருவதில்லை. நூல்கள் நமக்குக் கற்பனையையும், சிந்தனையையும், காரண காரியங்களையும் தருகின்றன. ஆதலால் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். கணினிகள் நமக்கு உறுதுணையாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை நாம் பயன்படுத்தவேண்டும். இணையதளங்களில் வரும் அறிவுசார் விடயங்களை வாசிக்கவேண்டும். நாமும் அவ்வாறான சிந்தனைகளில் ஈடுபட்டு நமது திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்நூல் அனைவருக்கும் பயனுள்ளதாக அமையும் எனக் கருதுகிறேன். வாசிக்கும் கலாசாரத்தை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இந்த நூலில் நமது மக்களின் வீரதீரச் செயல்களைப் புகுத்தியுள்ளேன். நமது இளைஞர்கள் எவ்வாறு செயற்பட்டார்கள் என்பதை விளக்கியுள்ளேன். நமது வரலாறு எவ்வாறு திரிபு பட்டது என்பதையும் நீங்கள் கண்டு கொள்ளலாம். அதனால் இந்நூலை வாசியுங்கள்.


இந்நூல் வெளிவரக் காரணகர்த்தாவானவர்கள் பலர். வாசகர்களாகிய நீங்கள்தான் முதல் நன்றிக்குரியவர்கள். எனது முன்னைய நூலை வெளியிட்டதைப் போலவே இதனையும் வெளியிடும் மகுடம் பதிப்பகத்தினருக்கும் அதன் இயக்குனர் மகுடம் வி. மைக்கல் கொலின் அவர்களுக்கும் மட்டக்களப்பு வணசிங்க அச்சக ஊழியர்கள் அனைவருக்கும் அணிந்துரை வழங்கிய கலாபூசணம் செ.விபுணசேகரம், என்னைப்பற்றிய அறிமுகம் தந்த நண்பர் ஓ.குலேந்திரன் அவர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கேணிப்பித்தன் ச.அருளானந்தம்**
ஆலங்கேணி
கிண்ணியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1

மகாவலி புராணகால இலக்கியங்களோடு தொடர்புடைய புனிதநதியாகும். அது பாய்ந்து வரும் அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். மழைக்காலத்தில் கிறேவல் நிறத்தில் காட்சியாகும். அது கொட்டியாரக் குடாக் கடலில் கலக்கும் காட்சி அற்புதமாக இருக்கும். சிற்றலைகள் எழுந்து மோதி கலகலக்கும்.

மகாவலி மத்திய மலைநாட்டில் மழையேந்தும் பகுதிகளில் இருந்து தாழ்நிலங்களை நோக்கி அருவிகள் ஒன்றாகி நதிகளாகப் பாய்கின்றன. மிக முக்கிய நதியாக மகாவலி திகழ்கிறது. சிவனொளி பாதமலையில் இருந்து தும்பறைப் பள்ளத்தாக்கு ஊடாகப் பாய்ந்து நெளிந்து பல கிலோமீற்றர் கடந்து கொட்டியாரக் குடாக்கடல் ஊடாகப் பாய்ந்து கோணேசர் மலையடிவாரத்தில் உள்ள மேற்குக் குகையில் நன்நீர் சுனையோடு கலந்து தூய்மைப்படுத்தி மகாவலியோடு கலக்கும். மகாவலி பாய்ந்து வரும் பிரதேசங்கள் செழித்துச் சிலிர்க்கும். எங்கும் தோட்டங்களும், வயல்வெளிகளுமாக கட்சி தரும். மக்கள் மனங்கள் மகிழ்ச்சியில் மூழ்க்கிக் கிடக்கும்..

ஆலங்கேணி, ஈச்சந்தீவு பாடசாலைச் சிறார்கள் சிறு வள்ளங்களில் ஏறி சவாரி செய்வார்கள். தாமரைவில், உப்பாற்றுச் சிறுவர்களும் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வார்கள். இரண்டு வள்ளங்களில் மயிலப்பன்சேனை, இறால்குழி போன்ற பல கிராமங்களில் இருந்து வரும் சிறுவர்களும் சேர்ந்து நீர்வழியாகச் சென்று மகாவலி ஆற்றில் வலம் வருவது வழக்கம். சில இடங்களில் முதலைக் குட்டிகள் நீரோடைகளின் கரைகளில் அசையாது படுத்திருக்கும்.

மணிமாறனும் சுகுணனும் நெருங்கிய நண்பர்கள். மகாவலியில் மற்ற நண்பர்களோடு நீச்சலடித்து விளையாடுவது அவர்களின் பொழுது போக்கு. முதலைகள் நடமாடாத இடங்களில் அவர்களது விளையாட்டு இருக்கும். கூரான நீண்ட ஈட்டிகள் தோணிகளில் இருக்கும். ஆபத்து வேளைகளில் முதலைகளிடம் இருந்து பாதுகாத்துக் கொள்ள அவை உதவும். இடைக்கிடை திண்ணைப் பள்ளிக்குத் தண்ணிகாட்டி விட்டு மகாவலிக் கரையில் நிற்பார்கள். மகாவலி கொட்டியாரக் குடாக்கடலில் கலப்பதைப் பார்த்து இரசிப்பார்கள். குடாக்கடலில் இருந்து மகாவலி ஊடாகப் படகில் போவோரையும் வருவோரையும் பார்ப்பார்கள். தெரியாத முகங்களை அதிசயமாகப் பார்ப்பார்கள்.

"ஏதும் உதவி வேண்டுமா?" என்று கேட்பார்கள். முதியோர்களுக்கு உதவுவார்கள். அவர்கள் ஏதும் பணம் கொடுத்தால் வாங்க மறுத்து விடுவார்கள். பதிலுக்கு ஒரு புன்னகை மட்டும் செய்வார்கள். அன்றும் அப்படித்தான் சிலர் மகாவலி வழியாகச் சென்றார்கள். தண்ணீரினில் சுழியோடித் தலைகளை மேலெழுப்பிப் பார்த்தார்கள். வேற்று நாட்டவர் சிலர் படகில் வந்தனர். அவர்களைத் தொடர்ந்து இருவரும் அவர்களைக் காணாதவர்கள்போல் ஆளையாள் துரத்திப் படகில் மறைந்து விளையாடினர். நன்றாகப் பார்த்தார்கள்.

படகு மகாவலி ஊடாக உள்நாட்டுக்குள் சென்றது. "டேய் அந்தப் பெரிய படகைப் பார்" மணிமாறன் மெல்லக் கூறியவாறே நாணற் புற்களில் மறைந்தான். சுகுணன் அவன் பின்னால் சென்று பார்த்தான்.

"டேய் சுகுணா! யாரிவங்க. புதுமுகங்களாகத் தெரிகிறது. முகங்க ளிலும் உடலெங்கும் ஏன் சாயம் பூசியுள்ளார்கள்? எங்கேயோ உதைக்குதே." கேட்டதும் சுகுணனுக்கும் ஐமிச்சம் வலுத்தது. "டேய் மணிமாறா! ஏதோ சதி நடக்குது. இதனை யாரிடம் சொல்வது?" யோசித்தார்கள். பல படகுகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சென்றன. முதற்போன படகு வெறுமனே திரும்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. அவர்களிடம் கேட்கப் பயமாக இருந்தது. சுகுணா இதுவரை 42 பேர் போயுள்ளார்கள். இவ்வாறு பலநாட்கள் தொடர்ந்தன. பள்ளிக்கூடம் பற்றிய நினைவு வந்ததும் நடுக்கம் பிடித்தது.

## 2

காசிநாதர் தளபதி நாகப்பரின் மேற்பார்வையில் தாமரைவில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கற்பிப்பவர். மணிமாறனும், சுகுணனும் சில நாட்களாகப் பள்ளிக்கூடப் பக்கமே வரவில்லை. அவர்களைத் தேடிப்பிடிக்கச் சில பிள்ளைகளை அனுப்புவார். அவர்களையும் தங்கள் பக்கம் ஈர்த்தெடுத்து மகாவலியில் சுழியோடி மணலெடுப்பார்கள். திண்ணைப் பள்ளிக்கூடம் கலையும் நேரத்துக்கே திரும்புவார்கள்.

அன்று விடிந்தது. வீட்டில் உள்ளவர்கள் எழுந்து வெளியில் வந்தார்கள். காசிநாதர் வீட்டு வாசலில் நின்றிருந்தார்.

"ஐயா! எங்கட வீட்டுக்கே வந்துட்டிங்களே. சொல்லியிருந்தா நாங்களே வந்திருப்போமே." மணிமாறனின் அப்பா தலையில் கட்டியிருந்த துணியைக் கையில் எடுத்துக் கொணடே கூறினார்.

"என்ன முத்தையா உன்ர மகன் மணிமாறன் எங்கே? அவன் கொஞ்ச நாட்களாக பள்ளிக்கே வருவதில்லையே. ஏன்?" சற்றுக் கோபத் தோடு கேட்டார்.

"அவன் ஒவ்வொரு நாளும் ஒழுங்காத்தானே வாறான். பள்ளி விட்டதும்தானே வீட்டுக்கு வருகிறான்.."

"முத்தையா அவன்ர போக்கில வித்தியாசம் இருக்கு. கூப்பிடு அவன." காசிநாதர் சிங்கத்தைப் போல் நின்றார். "வெளியில் சத்தம் போடுவது யார்?" எண்ணியவாறே கண்களைக் கசக்கிக் கொண்டு மணிமாறன் வந்தான். காசிநாதரைக் கண்டதும் கதிகலங்கிப் போனான்.

"டேய் மணிமாறா! பள்ளிக்குப் போறன் என்று பொய்சொல்லிப் போட்டு மகாவலியில் விளையாட்டா நடக்குது?" அவர் சீறி நின்றார்.

"ஐயா மன்னிக்க வேண்டும். நானும் சுகுணனும் முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையைக் கவனிக்கிறம். அதுதான் பள்ளிக்கு வரல்ல. அப்பாட்டச் சொல்ல வேண்டாம். அவர் அடிப்பார்."

"அப்படி என்ன முக்கிய வேல உங்களுக்கு?" பற்களைக் கடித்த வாறே சத்தமிட்டார்.

"நாங்க சிறுவர்கள்தானே? எங்கள யாரும் கண்டு கொள்வதில்ல. மகாவலி ஊடாகவும், மகாவலியைக் குறுக்கறுத்து வேற்றாக்களின் நடமாட்டம் அதிகமாய் இருக்குது. எங்களுக்கு விளங்காத பாசையில விளங்காதவாறு கதைக்கிறார்கள். இதை தளபதியாருக்கு அறிவிக்க வேண்டும். அது உங்களாலதான் முடியும். செய்வீர்களா ஐயா? செய்ய வேண்டும். நமது மண்ணைக் காப்பது நமது கடமை. ஐயா! இதை உடனே தளபதி நாகப்பருக்கு அறிவித்து விடுங்கள்."

கூறிவிட்டு மகாவலியின் கரையோரமாக ஓடினான். மறைந்திருந்த சுகுணன் மணிமாறன் பின்னால் ஓடினான்.

காசிநாதரின் மூளையில் மின்னல் வெட்டி மறைந்ததுபோல் இருந்தது. அவர் வந்த வழியே விரைந்தார். தகவலை தானே தளபதிக்கு நேரில் கூறவேண்டும். அப்படியே பாண்டியனூற்றுக்கு விரைந்தார். தளபதி நாகப்பர் அப்போதுதான் சிவன் கோவிலில் இருந்து வந்தார். காசிநாதர் நாகப்பரைக் கண்டதும் வணக்கம் கூறினார்.


"வணக்கம் வாருங்கள். பள்ளிக்கூடத்துக்கு ஏதும் தேவையா?"

"பள்ளிக் கூடம் தங்கள் தயவால் நன்றாகவே நடைபெறுகிறது. தளபதியாரே மிகமுக்கிய விசயம் பற்றிய செய்தியைக் கூறவந்தேன். நமது முத்தையாவின் மகன் மணிமாறனும் அழகப்பனின் மகன் சுகுணனும் சில நாட்களாகப் பள்ளிக்கூடம் வரவில்லை. அதனால் விசாரிக்க அவர்கள் வீட்டுக்குப் போனேன். ஆனால் அந்தச் சிறுவர்கள் சொன்ன செய்தி என்னைக் கவலையில் ஆழ்த்தியது. நமது மண் எதிரிகளின் ஊடுருவலால் நிலைகுலைந்து விடுமோ என்ற பயம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியைத் தங்களிடம் தெரிவிக்கும்படி மணிமாறன் கூறினான். அதனாலேயே நானே நேரில் வந்தேன்." என்றார்.

"நீங்கள் நமது மண்ணின் மேல் வைத்திருக்கும் பற்றுக்கு எனது நன்றிகள். பயப்படாதீர்கள். நல்ல செய்தியைத்தான் சொன்னீர்கள். அந்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுவர்களுக்கு நான் தகுந்த பாதுகாப்பும் உதவியும் செய்வேன். நீங்கள் உணவருந்திவிட்டு களைப்பினைப் போக்கிய பின் செல்லலாம்." கூறிவிட்டு கண்ணுச்சாமியைப் பார்த்தார்.

"கண்ணுச்சாமி! ஐயாவைக் கவனித்து ஆவன செய். அவரை கூட்டிச் செல்." கட்டளையிட்டுத் தனது வேலையில் ஈடுபட்டார்.

வேண்டிய வசதிகளைச் செய்ததும் அவருக்குரிய வெகுமதியையும் கொடுத்துக் காசிநாதரைக் குதிரை வண்டியில் கண்ணுச்சாமி அனுப்பி வைத்தான். காசிநாதர் சென்றபின் நாகப்பர் தமது ஒற்றர்படைத் தலைவர் களை அழைத்தார். எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை விளக்கினார். வன்னிமைகளுக்குப் பாதுகாப்பை துரிதப்படுத்தி விரிவுபடுத்துமாறு செய்திகளை ஒற்றர்கள் மூலம் அனுப்பி வைத்தார்.

சில வீரர்களை அனுப்பி முத்தையரிடம் கூறி மணிமாறனையும் சுகுணனையும் கூட்டிவருமாறு கட்டளை இட்டார். வீரர்கள் சென்று முத்தையாவைச் சந்தித்து தளபதியின் கட்டளையை முன்வைத்தனர். முத்தையா தனது மகன் மணிமாறனைத் தேடிப் பிடித்தார். சுகுணனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை அழகப்பரைக் கண்டு விசயத்தை விளக்கிப்பிள்ளைகளை வீரர்களுடன் அனுப்பி வைத்தனர்.

பாண்டியனூற்றில் உள்ள படையணி முகாமில் கல்வியுடன் போர்ப்பயிற்சியும் பெறும் வாய்ப்புக் கிடைத்தது. ஒவ்வொரு கிராமத்த லிருந்தும் ஏராளமான சிறுவர்களும் இளைஞர்களும் கல்வியை மேற்கொண்டனர். ஐந்து ஆண்டுகள் கல்வி தொடர்ந்தது. கல்வியின் இறுதியில் முத்தரையரிடம் அனுப்பப்பட்டனர். தங்கராசர் தம்பைநகரின் வன்னிமையாக இருந்தார். அவரின் கட்டுப்பாட்டிலேயே தம்பைநகர் இருந்தது. தம்பலகாமத்தினை நான்கு பிரிவுகளாக்கி தம்பலகாமம் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என வகுத்து தளபதிகளை முத்தரையர் நியமித்து ஆளுகையை உறுதிப்படுத்தியிருந்தார்.

நாகப்பர் மாகாமத்தின் கட்டளைத் தளபதியாக இருந்தார். அவர் தனது கட்டுப்பாட்டில் மாகாமத்தை செல்வச் சிறப்போடு வைத்திருந்தார். நான்கு தளபதிகளையும் ஒருங்கிணைத்து முத்தரையர் ஆட்சியை நடத்தினார். ஒவ்வொரு தளபதியும் தமது பொறுப்பில் உள்ள ஊர்ச்சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் கல்வியுடன் தற்காப்புப் பயிற்சிகளையும் வழங்கினர்.

நாகப்பரின் பயிற்சியினை முடித்தக் கொண்ட இளைஞர்களுக்கு உரிய பொறுப்புக்களைக் கொடுத்து பலபகுதிகளுக்கும் அனுப்பி வைத்தார். யார் யார் எந்தப் பகுதிக்கு அனுப்பப்படுவர் என்பது யாருக்கும் தெரியாது. அவர்கள் சந்தித்துக் கொண்டால் மட்டும் தெரியவரும். ஆனால் மாதம் ஒருமுறை எல்லோரும் நாகப்பரின் பயிற்சிக் கூடத்தில் கூடவேண்டும் என்பது பொது விதியாக இருந்தது.

பயிற்சியை முடித்தவர்களுக்குக் குதிரைகள் வழங்கப்படும். உடைவாளும், இன்னும் சில ஆயுதங்களும் கொடுக்கப்பட்டன. சுகுணன் முதலில் மகாவலிப் பக்கம் அனுப்பப்பட்டான். பின்னர் குடமுருட்டி ஆற்றுப் பகுதியில் அமர்த்தப்பட்டான். மணிமாறன் முள்ளியடி ஆற்றுக் கடவையில் அமர்த்தப்பட்டான். வேலழகன் சாவாற்றுக் கடவையில் பொறுப்பாக இருந்தான்.

மணிமாறனின் குதிரை விரைந்து கொண்டிருந்தது. அவனிடம் பல கடமைகள் ஒப்படைக்கப்பட்டன. குதிரையின் வேகத்தைவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது மனம் வேகமாக விரைந்தது. 'தம்பலகாமப் பற்று' படைப்பிரிவின் தளபதி முத்தரையரின் கட்டளையை நினைத்துக் கொண்டான். அவரது விசாலமான சிந்தனை அனுபவத்தின் முதிர்ச்சியைக் காட்டியது. அவன் சிறுவனாக சுகுணனுடன் அந்த மகாவலியில் நீச்சலடித்து விளையாடியதை நினைத்தான். அப்போதில்லாத அனுபவம் இப்போது அவனது நினைவில் அலைமோதியது. அந்த மகாவலி அவனது தாய். அதன் நீரைப் பருகிச் சுவைத்தவன்.

"மணிமாறா! இந்த நதிநீர்தான் நாம் வாழத் துணையாக உள்ளது. நமது தோட்டத்துக்கும், வயலுக்கும் வளமூட்டுவது அந்த மகாவலிதான். நீ இந்த மகாவலியின் மைந்தன். அடிக்கடி அவனது தந்தை முத்தையா கூறுவதை அப்போது அவன் உணரவில்லை. முத்தரையரின் விளக்கமே அவனைச் சிந்திக்க வைத்தது. முத்தரையரின் புவியியல் அறிவு அவனைப் பிரமிக்க வைத்தது. மகாவலி நதியை அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்திவிட்டார்.

"இலங்கைத் தீவுக்கு அழகையும், வளத்தையும் ஊட்டுவது மகாவலி. அது மத்திய மலைநாட்டில் உற்பத்தியாகிறது. பாம்பு ஊருவதுபோல் தும்பறைப் பள்ளதாக்கின் ஊடாக நெளிந்து வருகிறது.

# 3

மகாவலிதான் இலங்கையின் மிக நீண்டநதி. சலசலத்து ஓடும் மகாவலி பல பிரமிக்க வைக்கும் பெருமைகளைக் கொண்டது. அவற்றில் ஒன்று இயற்கைத் துறைமுகம். இரண்டு திருக்கோணேஸ்வரம். அடுத்து மகாவலி சங்கமிக்கும் கொட்டியாரக்குடாக் கடல். இன்னும் ஒன்று கன்னியா வெந்நீர் ஊற்று. அடுந்துக் கந்தளாய்க் குளத்து நீர் தம்பலகாமத்தின் விளைநிலங்களைச் செழிக்க வைக்கிறது. உதிரி நீர் தம்பலகாமக் குடாக் கடலில் உவப்பான சூழலை எற்படுத்துகின்றது. அதனால் முத்துவிளையும் கடற்பரப்பைக் கொண்டுள்ளது. இவையாவும் திருக்கோணமலைப் பிரதேசத்தை உலகின் நாகரிகப் பெட்டகமாக மாற்றியமைத்து விட்டது.

தம்பை நகர் ஊடாகவே முத்து, யானைத்தந்தங்கள், மயிற் தோகைகள், உணவுப்பண்டங்கள் ஏற்றுமதியாகின. தம்பைநகரின் துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமாக கப்பற்துறை விளங்கியது. அந்நியரின் படையெடுப்புக்கள் திருக்கோணமலை மாநிலத்தைப் பாதித்துக் கொண்டிருந்தது.

விஜயனின் வருகைக்கு முன்பே உலகநாட்டவரின் வணிகத் தலமாக விளங்கியது. திருக்கோணேஸ்வரத்தின் புகழ் உலகநாடுகளில் பரவியிருந்தது. கிரேக்கம், சாவகம், மத்திய ஆசியா போன்ற நாடுகளில் அதன் புகழ் பரவியது.

மகாவலிக்கு வடக்கே பரந்துள்ள பிரதேசம் தமிழர்களது தாயகம். அங்கு காலங்காலமாக தமிழ் மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். சைவ சமயம் தழைத்தோங்கியது. இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கை சங்ககாலத்தை ஒட்டியதாக அமைந்திருந்தது. மகாவலியின் கழிமுகமே திருக்கோணமலை நகரின் சிறப்பு.

"மணிமாறா! நீ போகும் வழி பயங்கரமானது. நீ தம்பைநகரில் இருந்து செல்கிறாய். குடமுருட்டி ஆற்றுக்கப்பால் தென் கிழக்காகத் தீனேரி பரந்திருக்கும். தீனேரிக்கு முன் பாண்டியனூற்றுச் சிவன் கோயிலில் நாகப்பர் உனக்காகக் காத்திருப்பார். அவரோடு இரண்டு நாட்கள் தங்கியிருப்பாய்." மணிமாறன் உன்னிப்பாகக் கேட்டான். தளபதி தங்கராசர் மணிமாறனை உசார்ப்படுத்தினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தளபதி நாகப்பரின் கட்டளைகளைப் புரிந்து கொள். அங்கிருந்து சுங்கான்குழி வழியாகக் கற்சுனை செல்கிறாய். கற்சுனையில் வீரத்தேவன் காத்திருப்பார். அவர் சொல்வதைச் செய். நமது மன்னர் முத்தரையர் மாகாமம் குளத்துத் திருத்த வேலைகளைத் தானே நேரில் பார்வையிட வருகிறார். அவரது பாதுகாப்புக்காக ஏற்கனவே சுகுணன் போயிருக்கிறான். அவனோடு கொட்டியாரப்பற்றுப் பிரதேசத்தில் அகத்தியர் தாபனப் பணியினைப் பார்வையிட்டு வா. உனக்கு உதவப் பலர் இருப்பார்கள். நீ சிறுவனாக இருக்கும்போது விளையாடிய மகாவலியைப் பார்த்து வா. அங்கே உன் பெற்றோரையும் சந்திப்பாய். நீ போகலாம்." முத்தரையர் முன்நின்று கட்டளையிடுவது போன்ற பிரமை மனதைக் குடைந்தது. குதிரை விரைந்து கொண்டிருந்தது.

வழி நெடுகிலும் நெடிய மரங்கள் செழித்துச் சிலிர்த்து அசைந்தன. படர்கொடிகள் பந்தலிட்டுக் கூரையிட்டவாறு வியாபித்திருந்தன. எங்கும் பறவையினங்களின் கூச்சல். விலங்குகளின் கும்மாளம். குரங்குகளின் கொண்டாட்டம். அவற்றையெல்லாம் இரசித்தவாறு மணிமாறன் வந்து கொண்டிருந்தான். குடமுருட்டி ஆற்றின் முதலைகள் வாழும் இடங்களை தங்கராசர் சுட்டிக்காட்டிய இடங்களை நினைத்துப் பார்த்தான். குதிரை விரைந்து கொண்டிருந்தது.

அடர் காட்டினைப் பார்த்தான். ஒற்றையடிப்பாதையால் குதிரை விரைந்தது. தூரத்தில் குடமுருட்டி ஆற்றுக்குச் செல்லும் வழி என்பதைத் தீர்மானித்துக் கொண்டான். குடமுருட்டி ஆற்றங்கரைக்கு வந்துவிட்டான். ஆற்றுக்கப்பால் தீனேரி வயல்வெளி. பச்சைக் கம்பளம் விரித்ததுபோல் பசுமையாகப் பசேலெனப் பரந்து கிடந்தது. குதிரை கனைத்தவாறு முன்னங்கால்களை உயர்த்தி வந்து நின்றது.

மணிமாறன் இறங்கிக் கொண்டான். குதிரை பின்னால் தொடர ஆற்றின் கரைக்கு நடந்தான். குதிரை களைத்திருந்தது. தண்ணீரைக் கண்டதும் குதிரை ஆற்றில் இறங்கிக் குளிர்ந்து தெளிந்து ஓடும் நீரை அருந்தியது. மணிமாறனும் ஆற்றில் இறங்கி கைகளால் குளிர்ந்த நீரை அள்ளித் தன் முகத்தில் விசிறியடித்தான். தண்ணீர் பட்டதும் உற்சாகம் பிறந்தது.

குதிரையின் முதுகில் தொங்கிய பொதியினுள் உணவு இருந்தது. குதிரையின் சுமையை இறக்கிக் கரையில் வைத்தான். அதன் உடலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரை வாரி இறைத்துக் கழுவினான். குதிரை சிலிர்த்தது. கரை வெண்மணற் பரப்பைப் பரத்தி விரித்திருந்தது. விசாலித்து நின்ற மரத்தின் நிழலுக்கு நடந்தான். தனது பொதியை மணிமாறன் எடுத்து வந்தான். பரந்திருந்த மணலில் வைத்தவாறே நின்று சூழலை அவதானித்தான். நல்ல புல் வளர்ந்திருந்தது. குதிரை புல்லைக் கண்டதும் மேயத் தொடங்கியது. அதன் கடிவாளத்தை இலகுபடுத்தினான். குதிரையும் பசியாறத் தொடங்கியது.


பொழுது உச்சிக்கு வந்து விட்டது. மரநிழலில் நின்றவாறே குடமுருட்டி ஆற்றின் அழகைப் பார்த்தான். நீர் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. கந்தளாய்க் குளத்துக்கு எலகரக் கால்வாயூடாக நீர் பாய்கிறது. குடமுருட்டி ஆறு மகாவலியின் நீரோடு கந்தளாய் குளத்து நீரும் சேர்ந்து தம்பலகாமக் குடாக்கடலில் கலக்கிறது. சாவாற்றில் இருந்து பிரிந்து குடமுருட்டி ஆறு திசைமாறிச் செல்கிறது. சாவாற்றுக்கப்பால் மகாவலிக்கரையோரம் மணல்விரிந்து கிடக்கிறது. கழிமுகத்தை அடை வதற்கு முன் இருகிளைகளாகி ஓடுகிறது. ஒன்று வெருகல் கங்கையாகி அப்பிரதேசங்களை வளங்கொழிக்கச் செய்கிறது. பெருங்கிளை கடலில் கலக்கிறது. கடலில் கலக்கும் நீரை கால்வாய் மூலம் விளை நிலங்களுக்குப் பாய்ச்சினால் நமது நாடு வெளிநாடுகளுக்கு உணவு வகைகளை அனுப்ப முடியும். நமது இளைஞர்களுக்கு நிலத்துடன் வேலைவாய்ப்பும் கொடுக்கலாம். நமது இளைஞர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். தங்கள் சொந்த நிலத்தில் சுதந்திரமாக வேலை செய்வார்கள்.

## 4

வெருகல் கங்கை சாவாறு ஊடாகப் பாய்ந்து வெருகல் முகத்து வாரத்தில் கடலில் கலக்கிறது. இடையில் அகத்தியர் தாபனத்தின் அருகாகப் பாய்ந்து வளமூட்டுகிறது. அந்தப்பிரதேசம் இளஞ்சிங்கன் வன்னிமையின் ஆளுகையின் கீழிருந்தது. தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆடி அமாவாசைத் தீர்த்தம் ஆடும் மகாவலி கங்கைக் கரையோரங்களில் உள்ள பல கிராமங்களில் விரதமிருந்து விடிய, விடியத் திருக்கரைசைப் புராணம் பாடி, விளக்கவுரை கூறி அதிகாலை தீர்த்தம் ஆடுவர். கிராமத்தவர்கள் ஒன்று கூடும் பெருவிழாவாக மகாவலி கங்கைக் கரை விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெருகலில்தான் ஸ்ரீ சித்திரவேலாயுதரின் திருக்கோயில் உள்ளது. சித்திர வேலாயுதர் காதல் என்ற நூலை தம்பலகாமத்துக் கவிஞர் வீரக்கோன் முதலியார் பாடியுள்ளதை மனதிருத்தினான். முத்தரையர் கூறியது செவிகளில் உறைத்தது.

அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. திடீரென உயர்மரக் கிளையில் இருந்து அந்த மர்ம இளைஞன் அவன்மேல் பாய்ந்தான். நிலை தடுமாறிய மணிமாறன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு தவறாது தன்மேல் பாய்ந்த அவனைப் புரட்டி மணலில் வீழ்த்தினான். அந்த இளைஞன் முகத்தைத் துணியால் மறைத்திருந்தான். மணிமாறனின் உடைவாள் அந்த இளைஞனை நோக்கி நீண்டது.

"ஏய் மணிமாறா உடைவாளை உறையுள் போடு."

அந்த இளைஞன் உரத்துச் சத்தமிட்டான். பரீட்சையமான குரல். மணிமாறன் உசாரானான். அவனது பிடி சற்றுத் தளர்ந்தது. ஆனால் பிடியை விடவில்லை. யாரடா நீ"


"நான் சுகுணன். உன்னிடம் உள்ள முரட்டுத்தனத்தை என்மேல் காட்டாதே. நான் ஒரு அப்பாவி."

சிரித்தவாறே சுகுணன் முகத்தை மூடியிருந்த துணியை அவிழ்த்தான்.

"டேய் நீயா? நீயொரு அப்பாவியா? முத்தரையரின் மரியாதைக்குரிய வீரன். எப்போது இப்படி அப்பாவி ஆனாய்?. நல்ல வேளை தப்பித்துக் கொண்டாய்." மணிமாறனின் பிடி தளர்ந்தது. சுகுணன் அவனிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருந்து விடுபட்டுக் கொண்டான். ஆற்று மணலை உடலில் இருந்து தட்டிவிட்டு எழுந்தான்.

"நீ உசாராய் இருக்கிறாயா என்று சோதித்துப் பார்த்தேன். நீ கெட்டிக்காரன்தான்." சிரித்தவாறே சுகுணன் சொன்னான்.

"சுகுணா! நீ இங்கே என்ன செய்கிறாய்? உனக்காக அங்கே எல்லோரும் காத்திருக்கிறார்கள். நீ போன வேலை முடிந்ததா"? ஆவலோடு கேட்டான்.

"அந்த வேலையைத்தானே பார்த்துக் கொண்டிருக்கிறேன். நினைத்த நேரம் நான் போகமுடியுமா?" சிரித்தான்.

"என்ன சிரிப்பு?"

"எனக்குத் துணைக்குத்தானே நீ வந்துவிட்டாய். இனி நான் உன்னோடு போகலாம். அதுதான் சிரித்தேன்." உற்சாகத்தோடு சுகுணன் சொன்னான்.

"நல்ல உணவு கொண்டு வந்திருக்கிறாயா? நல்ல உணவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டு எத்தனை நாளாகிறது? வா...வா.... சாப்பிடுவோம்." சுகுணன் அவசரப் படுத்தினான். "அடடே, எனக்கு மட்டுந்தானே கொண்டு வந்தேன். உனக்கு என்ன செய்வது? சரி இருப்பதைச் சாப்பிடுவோம்." மணிமாறன் சிரித்தவாறே கூறினான். "உனது மனதை எனக்குத் தெரியும்தானே. வரும்போது எனக்கும் சேர்த்துத்தானே கொண்டு வருவாய். இன்றைக்கென்ன அப்படி? பார்ப்போம். பொட்டலத்தை அவிழ்" என்று பறித்து அவிழ்த்தான்.

"எவ்வளவு சாப்பாடு? டேய் மணிமாறா என்னை எப்படியடா மறப்பாய்?. வா சாப்பிடுவோம்." அழைத்தான்.

"டேய் சுகுணா! நீ எதற்காக வந்தாய்?. உன்னை எதிர்பார்ப்பதாகக் கூறினார்களே. அது ஏன்?" மணிமாறன் வினாவினான்.

"சரி அதை விடு. வா... பசியாக இருக்கிறது. வயிற்றுக்கு ஏதாவது போடவேண்டும். 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும். இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' இதனை நீதான் சொல்வாயே. அப்போதுதான். உற்சாகம் பிறக்கும் என்று" கூறியவாறு நடந்தார்கள். வெருகல் ஆற்றில் இறங்கி உடலைக் கழுவினர். உடலெங்கும் ஒரு பரவசம் பரவியது. ஆற்று மணல் எங்கும் மரநிழல் குடைவிரித்து இருவரும் நிழலில் அமர்ந்தார்கள். உயர்ந்து வளர்ந்த மரங்கள் குடை பிடித்து நிழலைக் கொடுத்தன.

கட்டுச் சோற்றை அவிழ்த்து இருவரும் உரையாடிக் கொண்டே வயிறு நிறைய உண்டார்கள். ஊர்ப்புதினங்களை அலசிக்கொண்டார்கள். ஆற்றில் இறங்கித் தெளிந்த நீரை அவர்களுக்குக் கொடுக்கப் பட்ட பாத்திரத்தினுள் அள்ளிக் குடித்து முகங்களைக் கழுவிக் கொண்டு கரைக்கு வந்தார்கள். வரால் இன்னும் பல மீன்கள் அவர்களின் மிகுதியைப் பாய்ந்து உண்டன. பார்த்து மகிழ்ந்தார்கள்.

"அடுத்து நமது திட்டம் என்ன? மணிமாறன் ஆற்று மணலில் சாய்ந்தவாறே அடுத்த திட்டம் பற்றி சுகுணனிடம் கேட்டான். மணிமாறனைச் சுகுணன் ஆச்சரியமாகப் பார்த்தான்.

"என்னைக் கேட்டால்... திட்டம் உன்னிடம்தானே உள்ளது. நீயே சொல்லு." கூறிவிட்டுச் சுகுணன் நிமிர்ந்து இருந்தான். காட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிக்குள் யானையின் பிளிறல் கேட்டது. இவை அவர்களுக்குப் பழக்கப்பட்டது தானே. "இப்படியே பாண்டியனூற்றுக்குச் செல்ல வேண்டும். தளபதி நாகப்பரைச் சந்திக்க வேண்டும். இரண்டுநாள் அவரோடு பணியிலும், பயிற்சியிலும் ஈடுபடவேண்டும். அப்படியே கற்சுனை, சாவாறு சென்று பணிகளை நிறைவேற்றியபின் தளபதியிடம் மீண்டும் செல்ல வேண்டும்." அடிக்கிக் கொண்டே சென்றான். "இவ்வளவு வேலையா? அப்பப்பா... என்ன கொடுமைடா மணிமாறா? நீ எப்படிச் சமாளிப்பாய்"? மணிமாறனைப் பார்த்தவாறே கேட்டான்.

"உன்னை முதலில் அனுப்பியதே அதற்காகத்தான். கெதியாக நேரே இருவரும் பாண்டியன் ஊற்றுக்குச் செல்கிறோம். சரியா?" சுகுணனால் பதில் கூறமுடியவில்லை.

"பாண்டியனூற்றுக்கா? நானுமா?" அவனுக்குத் தெரியும். அவன் காட்டிக்கொள்ளாது சுகுணன் நடித்தான்.

"நானுமாவா? நீ இல்லாமல் நான் எப்படிப் போவது? இந்தக் குருக்கள் கங்கையைக் கடந்து மணியரசன்குளம் சென்று வில்வெளியூடாகப் போவதற்கு நீதானே வழிகாட்டி. உனக்கு குறுக்கு வழிகள் நல்லபடியாகத் தெரியும் என்று கூறினார்களே?." சிரித்தபடியே மணிமாறன் கூறினான்.

"இவ்வளவு நாளும் இங்கதானே தனியே கிடந்தேன். ஏனென்று கேட்க யாருமில்லை. என்ன செய்வது சரி நானும் வாறன்." சுகுணனும் ஒத்துக் கொண்டான். ஒத்துக்கொள்ளாமல் இருக்க முடியுமா? முத்தரையர் தேர்ந்தெடுக்கும் போதே கடமைகளைக் கூறிவிட்டாரே. அவரின் நம்பிக்கைக்குப் பொறுப்பான இரண்டு இளைஞர்களையும் அவர்தானே தேர்ந்தெடுத்தவர்.

பேராறு கிளைகளைப் பரப்பி வானாற்றின் ஊடாக குடமுருட்டியாறு மெல்லப் பாய்ந்து தம்பைநகர் வயற் பரப்புகளுக்கும் தோட்டங்களுக்கும் வளமூட்டி காலி பாய்ஞ்சான் ஊடாக தம்பைநகர் துறைமுகத்தினுள் புகுகிறது. குடமுருட்டி ஆற்றோடு பேராறு கலக்கும் இடத்தை வால்சேனை என்பர்கள். இன்றழைக்கும் முள்ளிப் பொத்தானையின் ஒரு பகுதியில் இருந்து பார்த்தால் வயல்வெளியின் வால்போல் தோற்றமளிக்கும். பேராறு கந்தளாய்க் குளத்து நீரோடு மழைநீரையும் பெருவாரியாகத் தேக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுப் பேரிரைச்சலோடு பாயும். அங்கிருக்கும் கடவை முக்கியமானது. அக்கடவையினால் ஒற்றர்கள் புகுவதுண்டு. அதனால் முதலைகள் காவலுக்காக விடப்பட்டுள்ளன. அடிக்கடி சுகுணனின் கவனம் அங்கிருந்தது.

அதிகமாக விவசாயிகள் நடமாடும் இடத்தில் முதலைகளின் தொல்லைகள் இல்லை. ஆற்றைக் கடப்பதற்குப் படகுகள் இருக்கும். அந்த இடத்தில் விவசாயிகளின் நடமாட்டம் இருக்கும். அதற்குப் பொறுப்பாக ஒருவர் இருப்பார். படகுகளில் செல்பவர்கள் சத்தமிட்டும், படகுகளில் தட்டி ஒலியெழுப்பியும் பயணிப்பார்கள். வேறுபகுதிகளால் யாரும் செல்லமுடியாது. முதலைகளில் இருந்து தப்பமுடியாது. முதலைகள் அப்பகுதிகளில் காவலிருந்தன. அவைகள் மக்களுக்குத் தொல்லை தருவதில்லை. அந்தக்கடவையைக் கடக்க முற்பட்டால் அவ்வளவுதான். அவர்கள் முதலைகளிடம் இருந்து தப்பமுடியாது

அந்தக்கடவையினால் விலங்குகளும் செல்லாது. ஒற்றர்கள் கடவையைக் கடக்கப் பயப்படுவார்கள்.

"சரி, களைப்பாறியது போதும் வெயில் குறைந்து விட்டது. புறப்படுவோம்." கூறிக்கொண்டே மணிமாறன் எழுந்தான். சுகுணன் ஆயத்தமானான். குதிரைகள் தயாராக நின்றன

இளைஞர்கள் பாய்ந்து ஏறினர். குதிரைகள் அங்கிருந்து புறப்பட்டன. சூரியன் மதியம் தாண்டி மேற்காகப் பயணத்தைத் தொடர்ந்தது. குடமுருட்டி ஆற்றைக் கடந்து சாவாற்றை நோக்கிப் பயணித்தார்கள்.

## 5

குதிரைகள் விரைந்தன. ஒருவழி மணியரசன் குளத்துக்குச் செல்கிறது. மறுவழி காலிபாஞ்சான் வழியாக சூரன்கல் செல்கிறது. சூரன்கல் வழியாகச் சென்றார்கள். அப்படியே வில்வழியூடாக நடுஊற்றுக்கு வந்து விட்டார்கள். எங்கும் தோட்டமும் துரவுமாகக் கிராமங்கள் செழித்துக் கிடந்தன. தேரோடும் வீதிகள் நெளிந்து சென்றன. ஒற்றையடிப் பாதையால் சென்றால் விரைவில் சென்று விடலாம். பொழுது சாயமுன் பாண்டியன் ஊற்றுக்குச் சென்று விடலாம். குதிரைகள் அவர்களது அவசரத்தைப் புரிந்து கொண்டதுபோல் விரைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மணிமாறா! அதோ பாண்டியன் ஊற்று தெரிகிறது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை நெல்வயல்கள் பரந்து கிடக்கிறன. நெருக்கமான குடியிருப்புக்கள் ஆங்காங்கு தெரிகின்றன. இன்னும் சற்று நேரத்தால் தளபதி நாகப்பரைச் சந்திக்கலாம். விரைந்து போவோம்." சுகுணன் சவாரி செய்து கொண்டே தெரிவித்தான். குதிரைகள் குறிப்பறிந்து விரைந்தன.

"யாரது? அசையாது அப்படியே நில்லுங்கள்." குரலொலி வந்த பக்கம் திரும்பினார்கள். இரண்டு முரட்டு வீரர்கள் வழியை மறித்து நின்றனர். அவர்கள் தமது வாளை வீசுவதற்கு ஆயத்தமானார்கள். மணிமாறன் கையில் அவனது வாள் ஒட்டிக்கொண்டது. அவனுக்குக் கோபம் வந்தது. "நீங்கள் யார் என்று சொன்னால் உங்களை ஒன்றும் செய்யமாட்டோம்." மணிமாறன் உசாராக நின்றான்.

"நீங்கள் யாரையாவது எதிர் பார்க்கிறீர்களா? தளபதி நாகப்பரை நாடி வந்ததாக கூறுங்கள். இல்லையேல் எங்கள் வாளுக்குப் பதில் கூறுங்கள். இங்கு ஒற்றர்களின் நடமாட்டம் அதிகரித்து விட்டது." வீரர்கள் ஆயத்தமானார்கள்.

"நாங்கள் தளபதி நாகப்பரிடம்தான் செல்கிறோம். அவரின் கட்டளையின்படி அவரைச் சந்திக்க வேண்டும். அதனால்தான் வந்தோம்" சுகுணன் கூறினான்.

"நீங்களும் தளபதியின் ஆட்களா?" ஆவலுடன் மணிமாறன் வினவினான்.

"ஆம். எங்கள் நாட்டின்மீது படையெடுக்க ஒற்றர்கள் வேவுபார்க் கிறார்கள். அவர்களை முறியடிக்க நாகப்பர் எங்களை வழிப்படுத்துகிறார். அதனால் நாங்கள் உங்களைப் பின்தொடர்கிறோம்."

சுகுணன் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"வாய் இருந்தால் சிரிக்கத்தானே செய்வார்கள்."

"அப்படியா? சிரியுங்கள்"

"உங்களது செயலுக்குச் சிரிக்காமல் என்ன செய்வது?"

"அப்படியானால் நாங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்"?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமாறன் விளக்கினான். அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"அங்கே பார்! தூரத்தில் சூரிய ஒளியில் மகாவலி தகதகக்கிறது. விரைந்து போவோம்." குதிரையை முடுக்கி விட்டார்கள். எங்கும் பசுமை விரித்துக் காடு மண்டிக்கிடந்தது. குரங்குகளின் கும்மாளம். மயில்களின் அகவல்கள்.

"சுகுணா! மயில்களின் அகவலிலும் ஒரு கனிவும் இனிமையும் தெரிகிறதல்லவா? இந்த நேரத்தில் அது மிகவும் அருமை." சுகுணன் இரசனையுடன் கூறினான். "கம்பர்கூட இதைப்பற்றிப் பாடவில்லை. நீ பாடேன்." தன் நகைச்சுவையை அவிழ்த்து விட்டான். இப்போது ஒற்றையடிப் பாதையால் குதிரைகள் விரைந்தன.

மணியரசன்குளப் பக்கம் செல்லாமல் வில்வழியை நோக்கிச் சென்றார்கள். நடுவூற்றுக்கு வந்துவிட்டார்கள். நடுவூற்றில் நின்று பார்த் தார்கள். பாண்டியனூற்றில் நாகப்பரின் அரண்மனை தெரிந்தது. விரைந்து பாண்டியனூற்றுக்கு வந்துவிட்டனர். நாகப்பர் தனது படைவீரர்களுக்குப் பயிற்சியளித்துக் கொண்டிருந்தார். இருவரும் குதிரைகளை விட்டிறங்கி வந்தார்கள். நாகப்பருக்குக் கழுகுக் கண்கள். இளைஞர்களைக் கண்டு விட்டன. ஒருவீரனை அழைத்துக் கட்டளையிட்டார். பயிற்சியினைப் பார்த்துக் கொண்டு நின்றவர்களிடம் வீரன் வந்தான்.

"என்னோடு வாருங்கள்" அழைத்தான்.

இருவரும் அவன் பின்னால் சென்றனர். நாகப்பரின் மாளிகைக்கு முன்னால் இருந்த விடுதியில் விட்டான்.

"இங்கு குளித்து ஓய்வெடுங்கள். தளபதி பின்னர் சந்திப்பார்" அவன் சென்றுவிட்டான். குதிரைகளை அதற்குரிய இடத்தில் விட்டார்கள். அவைகளுக்கு வேண்டிய உணவு. தண்ணீர் தயாராக இருந்தன. அவற்றைக் கவனிக்கவென காப்பாளர்கள் இருந்து செயற்பட்டனர்.

"சுகுணா! தளபதி வருமுன் நாம் ஆயத்தமாக வேண்டும். நீராடினால் சுகமாக இருக்கும். தயாராகுவோம்" இருவரும் நீராடி ஓய்வெடுத்தனர். சிற்றுண்டிகள் வந்தன. களைப்பைத் தீர்த்தனர். தளபதியை எதிர்பார்த்த வண்ணம் இருந்தனர். இருள் சூழ்ந்து விட்டது. விளக்குகள் ஏற்றப்பட்டன. எங்கும் சோதிமயம். பாண்டியனூற்று சிறு நகரமாக ஒளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசியது. மணிமாறன் முத்தரையர் இட்ட கட்டளைகளை நினைவுபடுத்திக் கொண்டான். தளபதி நாகப்பரின் கட்டளைகள் எவ்வாறிருக்கும்? யோசித்தான். அவர் வந்து விளக்குவார்தானே?

நாகப்பரை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

வெளியில் மனிதர்களின் குரல் கேட்டது.

தளபதி நாகப்பரின் வருகையை விடுதி மேற்பார்வையாளன் அறிவித்தான். மணிமாறன் உசாரானான். நாகப்பரை வரவேற்க ஆயத்தமானான்.

நாகப்பர் விடுதியினுள் நுழைந்தார்.



## 6

மரியாதையுடன் வரவேற்றார்கள்.

மணிமாறன் அவரது ஆளுமையைக் கண்டு கொண்டான். அவருக்கான இருக்கையை விடுதி மேற்பார்வையாளன் ஏற்பாடு செய்திருந்தான். அவர் விடுதியினுள் நுழைந்ததும் இருக்கையில் அமர்ந்தார். மணிமாறனையும் சுகுணனையும் அமரும்படி சைகை காட்டினார். அவரது ஆளுமையைக் கண்டு வியந்தனர். எடுப்பான தோற்றம். அகங்கார மற்ற முகமலர்ச்சி எந்த நேரமும் மகிழ்ச்சி நிறைந்த உள்ளமும் கொண்ட மாமனிதன்.

அவர்கள் அமர்ந்தார்கள்.

"மணிமாறா! நாளை முக்கியமான வேலையிருக்கிறது. வன்னிமை வேல்மாறன் வன்னிபம் மாகாமக்குளத்துக் கட்டுமான பணிகளைப் பார்வையிட வருகிறார். அத்துடன் மூர்க்கமாதாவின் கோயிலில் வழிபாடு செய்வார். அவரது பாதுகாப்பு உன்னுடையது. சுகுணா! நீ பாண்டியனூற்றுச் சிவன் கோயிலைச் சுற்றியுள்ள பகுதியில் பாதுகாப்பில் ஈடுபடவேண்டும்." நாகப்பர் விளக்கம் கொடுத்துக் கொண்டே இருந்தார். மிகக் கவனமாக மணிமாறன் செவிமடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய கட்டளைகளைக் கொடுத்தபின் நாகப்பர் சென்றுவிட்டார். இருவரும் குதிரையை முடுக்கினர். சிவன் கோயிலைச் சுற்றிப் பாரத்தனர். பார்த்து முக்கிய இடங்களை நோட்டம் விட்டனர். அதன் அமைப்பைப் பார்வையிட்டனர்.



"சுகுணா! இந்தக் கோயிலின் அமைப்பைப் பார்த்தாயா? எவ்வளவு கலைநுணுக்கத்தோடு இதனைக் கட்டியுள்ளனர்.

ஒவ்வொரு தூணும் ஒரு தனிக்கல்லால் ஆனது. நமது மூதாதையரின் கட்டிடக்கலை எவ்வளவு மகத்தானது." மணிமாறன் வியந்து போற்றினான். "மணிமாறா! எட்டி நில். அங்கே பார் நாகங்கள் எம்மைப்பார்த்து நிற்கின்றன. சற்று விலகிப் போவோம். தீங்கு செய்வோரை மட்டுமே அவை தாக்கும்." சுகுணனின் சொல்லுக்கு மணிமாறன் கட்டுப் பட்டான். அவர்கள் போகும் வரை நாகங்கள் அப்படியே நின்றன. அவர்கள் விரைந்து சென்றனர்.

"இவற்றை அழித்தொழிக்கவும், செல்வங்களைச் சூறையாடவும்தான் பகைவர்கள் திட்டமிட்டுள்ளார்கள். அதற்கு நம்மவரும் துணைபோகின்றனர். அதனை முறியடிக்கத்தான் நாம் வந்துள்ளோம்" சுகுணன் ஆவேசத்துடன் சொன்னான்.

"சுகுணா! இப்போதுதான் எனக்குப் புரிகிறது. பலகாலமாக எதிரிகள் தகவல்களைத் திரட்டி எடுத்துள்ளனர். நாம் விழிப்புடன் இருந்து செயற்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு எதிரிகளை அழிக்கவேண்டும்" ஆவேசத்துடன் மணிமாறன் ஒலித்தான்.

"சுகுணா! கோயிலில் நடக்கவிருக்கும் வைபவத்தில் ஏதும் நடக்கலாம். நமது பயிற்சிபெற்ற இளைஞர்களை ஒன்று கூட்டவேண்டும். அவர்களுக்குச் சில பயிற்சிகளைக் கொடுப்போம். இப்போதிருந்தே தொடங்குவோம். அதற்கான ஏற்பாடு செய். நான் இந்த இடங்களைச் சுற்றி நோட்டம் விட்டு வருகிறேன்." உடனடியாக அவ்விடத்தை விட்டு நகர்ந்தான். எதேச்சையாக அவனது கண்கள் தூரத்தில் தெரிந்த புதரை நோக்கித் திரும்பின.

புதர் வித்தியாசமாக அசைந்ததைக் கண்கள் படம்பிடித்தன. அவனது கால்கள் அவ்விடத்தை நோக்கி நகர்ந்தன. புலி பதுங்குவதுபோல் பாய ஆயத்தமாகி அடிமேல் அடிவைத்து நடந்தான். சந்தேகம் அதிகரித்தது. அண்மையில் உள்ள புதரினுள் நுழைந்து மறைந்தான்.

ஒரு கூட்டமே அங்கிருந்தது. அவர்கள் அந்த இடத்துக்குப் பழக்கப் பட்டவர்கள் போல் நடந்து கொண்டனர். பயமின்றி சந்தோசமாகக் கூடி உரையாடினர். அவர்கள் நமது நாட்டு இளைஞர்கள். வேலைகள் இல்லாது வறுமையில் வாடுபவர்கள். பணத்துக்காகக் அனைவரும் கூலிப்படைகள். ஆகியவர்கள்.



"டேய், பரமா! கவனமாகக் கேள். மாகாமத்துக்கு வன்னிமை முத்தரையர் வருகிறார். பாண்டியனூற்றில் நமது ஆட்கள் மறைந்திருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். சடுதியாகப் பாய்ந்து அதிரடித் தாக்குதல் செய்யவேண்டும். அதேநேரம் மாகாமக் குளக் கட்டில் மக்களோடு நின்று வன்னிமையைச் சாய்க்க வேண்டும். புரிகிறதா?" அவன்தான் அக்குழுவின் தலைவன்போல் தெரிந்தது.

"ஓம்... தலைவா! நான் ஒன்று சொல்லவா? மன்னர் சாவாற்றைத் தாண்டும்போதும் தாக்கலாமே."

"டேய் மாதவா! உனக்கும் மூளை வேலை செய்கிறதே. அதுவும் நல்ல திட்டந்தான். ஆனால் அங்கு அதிகம் கெடுபிடிகள் இருக்கும். எதற்கும் நமது ஆட்களை அங்கும் நிறுத்துவோம்." அவன் ஒப்புதல் அளித்தான். அவனே தொடர்ந்தான். வீரசாமி வருவார். அவர் வந்ததும் மிகுதியை விளக்குவார்.

"கவனியுங்கள். யாராவது பிடிபட்டால் உயிரைவிடவும் தயாராக இருக்க வேண்டும். இன்னும் ஒருநாள்தானே இருக்கிறது. அதுவரை இந்த இடம் நமக்குப் பாதுகாப்பானது." ஒருவன் விளக்கினான். அவை மணிமாறனின் செவிகளில் புகுந்தது. அவனின் மூளை விரைந்து செயற்பட்டது.

அந்த இடத்தை நோட்டம் விட்டான். அவனை யாரும் கவனிக்க வில்லை. அவர்கள் பல நாட்களாக காத்திருப்பது புரிந்தது. பல இடங்களில் பதுங்கியிருப்பதும் தெரிய வந்தது. மக்களோடு மக்களாக ஊடுருவித் தகவல்களைத் திரட்டியுள்ளதையும் தெரிந்து கொண்டான்.

அக்கூட்டத்தில் இரண்டு மூன்று வெள்ளைக்காரர்களும் தெரிந்தனர்.

"நாங்க வெற்றிபெறுவோம். துரை எங்களுக்கு ராசபதவி தருவார். நமக்கு நிறையவே பணம் கிடைக்கும்." ஒருவன் சந்தோசத்தில் சத்தமிட்டான்.

மணிமாறனுக்குப் புரிந்துவிட்டது. விரைந்து அங்கிருந்து பின்வாங்கி னான். சுகுணனைத் தேடியோடினான். சுகுணன் இளைஞர்களோடு உரையாடிக் கொண்டிருந்தான். அவர்களுள் தங்களை வழிமறித்தவர்களும் இருந்தார்கள். மணிமாறனைக் கண்டதும் சுகுணன் அவன்முன் வந்தான்.

"மணிமாறா! பெரிய ஆபத்து நம்மைச் சூழ்ந்திருக்கு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுகுணாா! நீ என்ன சொல்கிறாய்"?

"எதிரிகள் பல இடங்களில் பதுங்கியிருக்கிறார்கள். அவர்களை மடக்கிப் பிடிக்க வேண்டும். இதிலுள்ள இளைஞர்களில் நம்மோடு ஒத்துழைக்க எத்தனை பேருள்ளனர்?"

"சுமார் நாப்பது வீர்கள் ஆயத்தமாகவே உள்ளார்கள்."

"அவர்களோடு நான் பேசுகிறேன். நண்பர்களே நமது பிரதேசம் எதிரிகளால் சூழப்பட்டுள்ளது. நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? முக்கியமான இடங்களில் எதிரிகள் ஊடுருவிப் பதுங்கியுள்ளார்கள். அவர்களை இன்றே மடக்கிப் பிடிக்கவேண்டும். முதலில் தளபதியைச் சந்திப்போம். வாருங்கள் தளபதியிடம் செல்வோம்." மணிமாறன் விடுதியை நோக்கி நடந்தான். அவனைத் தொடர்ந்து இளைஞர் படையணி சென்றது.

விடுதியில் அவர்களுக்காகச் சிற்றுண்டி காத்திருந்தது. இளைஞர் களை விடுதியில் விட்டதும் மணிமாறனும், சுகுணனும் நாகப்பரின் அரண்மனைக்கு விரைந்தனர். நாகப்பர் அவர்களை எதிர்பார்த்திருந்தார். அவர்களின் முகங்களில் கலவரம் தெரிந்தது.

"ஏன் பதட்டத்தோடு இருக்கிறீர்கள்?" அவரே தொடங்கினார்.

"தளபதியாரே! நம்மைச் சூழ்ந்து எதிரிகள் பதுங்கியிருக்கிறார்கள். இன்று இரவு அவர்களை மடக்கிப் பிடிக்க வேண்டும். அதற்கு தங்கள் அனுமதி வேண்டும். அத்துடன் நல்ல பயிற்சியுள்ள இளைஞர்களும் வேண்டும்"

"உங்கள் செய்தி எனக்கு அதிர்ச்சியாக உள்ளது. இவ்வளவு பாதுகாப்பு இருந்தும் எதிரிகள் சுதந்திரமாக உலாவுகிறார்களா? நமது வீரர்கள் என்ன செய்கிறார்கள்?." நாகப்பரின் கண்கள் சிவந்து முகத்தில் கோபம் குந்திக்கொண்டது. வாளை உறையில் இருந்து உருவினார்.

"தளபதியாரே! ஆத்திரம் வேண்டாம். எதிரிகள் பகலில் மக்களோடு உலாவருகிறார்கள். இரவில் ஒரு இடத்தில் கூடி திட்டமிடுகிறார்கள். ஒரு குழுவினர் சாவாற்றில் பதுங்கும். ஒரு குழு மாகாமக் குளக்கட்டில் பதுங்கியிருக்கும். பாண்டியனூற்றில் இன்னொரு குழு பதுங்கியிருக்கும். இன்றுஇரவு நடுச்சாம வேளையில் அவர்கள் பிரிந்து செல்வார்கள். அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன் நாம் செயற்பட வேண்டும். அங்கேயே அவர்களைச் சாய்க்கவேண்டும். அனுமதியை வேண்டுகிறோம்" மணிமாறன் விளக்கி அனுமதி கோரினான்.

மணிமாறனை ஏற இறங்கப் பார்த்தார்.

"மணிமாறா! நீங்கள் இருவரும் இங்கு வந்தவுடனேயே பல துப்புகளை துலக்கிவிட்டீர்கள். பாராட்டுக்கள். நானும் உங்களுடன் வருகிறேன். உடனடியாக என்ன செய்ய வேண்டுமோ அதனைச் செய்யுங்கள். நீங்கள் விடுதிக்குச் செல்லுங்கள். நான் பின்னால் வருகிறேன். புறப் படுங்கள்" கட்டளையிட்டார்.

மணிமாறனும் சுகுணனும் விடுதிக்கு விரைந்தனர். அங்கு ஏராளமான இளைஞர்கள் திரண்டிருந்தனர். இருவரையும் கண்டதும் அவர்கள் அணி வகுத்து நின்றனர். அவர்கள் முன் மணிமாறனும் சுகுணனும் வந்தனர்.

"நண்பர்களே! நமது பிரதேசத்தைக் கைப்பற்றச் சூழ்ச்சி செய்வோர் சூழ்ந்துள்ளனர். அவர்களைச் சுற்றி வளைத்து மடக்கவேண்டும். உங்களில் துணிந்தோர் கையை உயர்த்துங்கள்." வில்லில் இருந்து புறப்படும் அம்பு போல் இளைஞர்களின் செவிகளில் குத்திட்டு மூளையில் பதிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

"நாங்கள் இருக்கிறோம். இப்போதே புறப்படுவோம்." ஏகமனதாகக் குரல் கொடுத்தனர். அப்போது தளபதி நாகப்பர் வந்து சேர்ந்தார். அக்காட்சியைக் கண்டதும் மெய்சிலிர்த்து நின்றார்.

"தளபதி நாகப்பர் வாழ்க" குரல்கள் ஓங்கியொலித்தன.

அவர் கைகூப்பி வணங்கியதும் நிசப்தம் நிலவியது.

"வீரர்களே! இன்று நமது வீரத்தைக் காட்டவேண்டிய நாளாகும். பத்துப்பேர் சாவாற்றுக்குப் போகிறீர்கள். பத்துப்பேர் மாகாமத்துக்குப் போகிறீர்கள். பத்துப்பேர் பாண்டியனூற்றுப் பகுதியில் கடமையில் ஈடுபடுவீர்கள். மிகுதியானவர்கள் எங்களோடு சேருவர். எங்களுடன் சேருபவர்கள் தங்கள் உயிர்களையும் இழக்கத் தயாராக இருக்கவேண்டும். உங்களுக்குரிய உணவு இங்கேயே கிடைக்கும். உரிய ஆயுதங்கள் இங்கேயே உண்டு. சாவாற்றுக்குப் புறப்படும் படையணியினருக்கு நகுலன் தலைமை தாங்குவார். அவர் உங்களுக்குச் சிறந்த தலைவராவார்.

மாகாமத்துக்குப் புறப்படும் படையணிக்கு அறிவழகன் தலைமை தாங்குவார். பாண்டியனூற்றுப் படையணிக்கு நான் பொறுப்பாக இருப்பேன். சம்மதமா?" கேட்டுநின்றார்.

"சம்மதம்" ஏகமனதாகப் பதில் வந்தது.

"சரி. தலைவர்கள் முன்னால் வாருங்கள்." நாகப்பர் கட்டளையிட்டார். அவர்கள் நாகப்பரின் முன் நின்றார்கள்.

"உங்கள் அணிகளைத் தேர்ந்தெடுங்கள். அவர்கள் அர்ப்பணிப்புடன் கடமையாற்ற வேண்டும். நமது துரோகிகளை இனங்காண வேண்டும்." நாகப்பர் கட்டளையிட்டுக் காத்திருந்தார்.

இளைஞர்கள் நான்காகப் பிரிந்தனர். நகுலன் தனது படையணியை வேறாக்கினான். அறிவழகன் தனது படையணியைப் பார்வையிட்டு நின்றான். பாண்டியனூற்றுப் படையணியில் அதிகமானோர் நின்றனர். அதிலிருந்து பத்துப் பேரைச் சிவன் கோயிலைச் சுற்றிக் கண்காணிக்க விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதமுள்ள முப்பது பேரையும் வேறாக்கினார். பெரிய படையணி நிலத்தில் அமர்ந்திருந்தது. "நீங்கள் எவ்வாறு இயங்கவேண்டும் என்று மணிமாறன் சிறிது விளக்கம் தருவார்." நாகப்பருக்கான இருக்கை இருந்தது. அதில் அமர்ந்து கொண்டார். மணிமாறன் எழுந்தான். முத்தரையர் கொடுத்த விளக்கம் அவன் மனக்கண் முன் விரிந்தது.

"நமது மன்னர் சாவாற்றைக் கடக்கும்போது அதிரடித் தாக்குதலை மேற்கொள்ள எதிரிகள் திட்டமிட்டுள்ளார்கள். எதிரிகள் அங்கு தாக்குவது சிரமம். சாவாற்றைக் குறுக்கறுப்பது முடியாத செயல். அங்கு முதலைகள் நிறையவே உண்டு. மக்கள் நடமாடும் இடத்தில் மறைந்திருந்தால் போதும். அங்குள்ள நமது வீரர்களை உசார்ப்படுத்தினால் எதிரிகளின் திட்டம் தவிடுபொடியாகிவிடும்." மாகாமத்துக்குரிய பாதுகாப்பை விளக்கினான்.



"மாகாமக் குளக்கட்டில் மக்களோடு எதிரிகள் கலந்து நிற்பார்கள். இன்னொரு பிரிவு மூர்க்கமாதா கோயிலைச் சூழ எங்காவது மறைந்திருந்து தாக்குவார்கள். அதற்கேற்ப நீங்கள் விழிப்போடு நின்று பாதுகாக்க வேண்டும்."

"மிகுதியானவர்களின் பொறுப்பு மிகவும் முக்கியமானது. அதனை செயல் மூலந்தான் விளக்க வேண்டும். அதனைச் செய்து பார்ப்போம். ஆயுதங்களின்றிச் செய்வோம். கூட்டமாகச் சிலர் இருந்து திட்டமிடுகிறார்கள் என வைத்துக் கொள்வோம். வேட்டையாடும் புலியைப்போல் பதுங்கித் திடீரெனத் தாக்க வேண்டும். எதிர்பாராத நமது தாக்குதலால் எதிரிகள் நிலைதடுமாறி விடுவார்கள். மூன்று வியூகங்களை அமைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலணி ஊடுருவி முன்னேற வேண்டும். இரண்டாவது அணி தப்பி வருவோரை வேட்டையாட வேண்டும். மூன்றாம் அணி காயப்பட்ட நமது வீரர்களைப் பாதுகாப்பாக எடுத்து வரவேண்டும். இவற்றையெல்லாம் நமது தளபதி பயிற்சியின் போது கற்றுத் தந்திருப்பார். நமது எதிரிகள் ஒரு இடத்தில் கூடியிருப்பர். நடுச்சாம வேளையில்தான் தமது இடங்களுக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளார்கள். அவர்களது கலந்துரையாடல்களை நன்றாகச் செவிமடுக்க வேண்டும். பின்னர் அதிரடியாகச் செயலில் இறங்க வேண்டும்."

"ஒரு சந்தேகம்"

"என்ன சந்தேகம். கூறுங்கள்"

"இருளில் எவ்வாறு கட்டளைகளைப் புரிந்து கொள்வது?"

"நல்லதொரு கேள்வி. எதிரிகள் முகாமிட்டிருக்கும் பகுதி பனிச்சை மரங்கள் நிறைந்த சோலை. தீவறை வெளிச்சம் இருக்கு. பனிச்சை மரங்களில் பழங்கள் பழுத்துக் குலுங்கும். இருளானதும் வெளவால் கூட்டம் கீரடி மாரடி என்று சத்தமிடும். வெளவால்கள்தான் நமக்குத் துணை. அவற்றைப் போல் ஒலியெழுப்புவோம். நாங்கள் விரைந்து செயற்பட்டால் கண்ணிமைப் பொழுதில் எதிரிகளை நிர்மூலமாக்கலாம். சத்தியப் பிரமாணம் எடுப்போமா?" மணிமாறன் ஆவேசத்தோடு சத்தமிட்டான்.

## 08

"நமது மண்ணை நாமே காப்போம். புறப்படுவோம்" படையணி ஆயத்தமாகியது. நாகப்பருக்கு ஒரே மகிழ்ச்சி. இளைஞர்களின் படையைப் பார்த்துப் பூரித்துப் போனார். "எல்லோரும் ஆயத்தமாகுங்கள். நான் இதோ வருகிறேன்." கூறிவிட்டு அரண்மனைக்குச் சென்றார். படையணியினர் போராடும் ஆர்வத்தில் இருந்தனர். நல்ல உணவினை உண்டனர். தமக்குரிய படைக்கலங்களை எடுத்து ஆயத்தப் படுத்தினார்கள்.

எப்படி எதிரிகளை மடக்கிப் பிடிக்கலாம் என்று மணிமாறனும் சுகுணனும் பயிற்சியளித்தனர். இருவரிருவராகச் செய்து பார்த்தனர். நாகப்பர் வந்ததும் விவசாயிகள்போல் காட்சியளித்தனர். சாவாறு வயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்பைக் காவல் காக்கும் காவலாளிகள் போல் சாவாற்றுப் படையணியினர் ஆயத்தமாகி நின்றனர்.

நாகப்பர் வந்ததும் அவர்கள் எப்படி இயங்கவேண்டும் என்று விளக்கி உசார்ப்படுத்தினார். வாழ்த்துக்கள் வழங்கி "செய் அல்லது செத்து மடி, வெற்றியுடன் வருக" வாழ்த்தி வழியனுப்பினார். நகுலன் வழிநடத்திச் சென்றான்.

காக்கச் செல்லும் படையணி ஆயத்தமாக நின்றனர். அவர்களுக்குச் சில ஆலோசனைகளை வழங்கினார். தானும் அடிக்கடி அங்கு வருவதாய் கூறி "செய் அல்லது செத்து மடி, வெற்றியுடன் வருக" வாழ்த்தி வழியனுப்பினார்.

நிலத்தில் மணிமாறன் ஒரு வட்டத்தை வரைந்தான். அதனைச் சுற்றி பெரிய வட்டத்தை வரைந்தான். அதனைச் சுற்றிப் பெரிய வட்டத்தை வரைந்தான். வட்டத்தினுள் செல்வதற்கான மூன்று வழிகளையும் வரைந்தான்.

"இந்தச் சின்ன வட்டத்துக்குள் போவதற்கும் வருவதற்கும் இந்த வழிகள்தான் உண்டு. அதற்குள்தான் நமது எதிரிகளின் முகாம் உண்டு. அங்குதான் எதிரிகள் இருக்கிறார்கள். நாம் பற்றைகளுக்குள் மெதுவாக நுழையவேண்டும். எதிரிகளின் கவனம் நம்பக்கம் திரும்பாதவிதத்தில் செயற்படவேண்டும். எதிரிகள் எதிர்பாராத நேரத்தில் தாக்கவேண்டும். அவர்கள் சிதறி ஓடும்போது நமது வீரர்கள் தாக்கி மடக்கவேண்டும். துரிதமாகவும் வேகமாகவும் நமது ஆயுதங்கள் சுழலவேண்டும். முடியுமான வரை பற்றைக்குள் பதுங்கியிருப்போரைக் கைது செய்ய வேண்டும்." மணிமாறன் வீராவேசத்துடன் நின்றான்.

"பாண்டியனூற்றில்தான் நமது கவனத்தைத் திருப்பவேண்டும். ஒருபுறம் நான் சிலரோடு தயாராக நிற்பேன். நான் கிழக்குப் பக்கமாக நிற்கிறேன்." நாகப்பர் விரைந்தார். அவரைத் தொடர்ந்து சிலர் விரைந்தனர்.

மணிமாறன் கூற்றுப்படி எதிரிகள் உணவின்பின்தான் புறப்படுவர். ஆனால் அவர்கள் அந்த நாளைக் கொண்டாடுவதற்காக நெடுநேரம் எடுத்தனர். தங்களை ஆபத்துச் சூழ்ந்துள்ளதை அவர்கள் அறியவில்லை. பனிச்சை பழுத்துக் குலுங்கியது. பனிச்சையை வெளவால்கள் ஆக்கிரமித்தன. 'கீ...ச்.., வீ...ச்..' என அவற்றின் ஒலிகள் காடெல்லாம் எதிரொலித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீவறைகளின் வெளிச்சம் மட்டும் பரவியிருந்தது. மணிமாறன் நாகப்பரைப் பின் தொடர்ந்தான். நாகப்பர் எதிர்த்திசையில் ஆயத்தமாக நின்றார். அவர் பின்னாலும் பக்கவாட்டிலும் மற்ற வீரர்கள் கவனமாக நின்றார்கள். சுகுணன் மற்ற வழியில் தனது வீரர்களுடன் தயாராக நின்றான். அனைத்து வீரர்களின் கைகளிலும் வாள்களும், வேல்களும் மின்னின. பின்வாங்கி ஓடுபவர்களைக் கைது செய்தவுடன் கட்டிப் போடவேண்டும். அதற்கான கயிறு சில வீரர்களின் கைகளில் இருந்தது.

வெளவால்களின் ஒலியோடு நாகப்பரின் ஒலியும் புறப்பட்டது. எதிர்பாரத கரந்தடி எதிரிகளால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. மணிமாறன் பனிச்சை மரத்தில் ஏறியிருந்து எதிரியின் மேல் பாய்ந்தான். அதேநேரம் நாகப்பர் ஒருபுறம் சாடினார். சுகுணன் இன்னொரு புறம் விளையாடினான். எதிரிகளுக்குத் தப்பியோட அவகாசம் கிடைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09

கண்மூடிக் கண் திறக்குமுன் எல்லாம் நடந்து முடிந்து விட்டது. எதிரிகளின் திட்டம் தவிடுபொடியானது. தாக்குதலுக்கு உள்ளான மூன்று அந்நியரின் உயிர்கள் பிரிந்துவிட்டன. பல எதிரிகளைப் பிடித்துக் கட்டியி ழுத்துச் சிறையில் அடைத்தனர். சிறை நிலத்தினடியில் குழிதோண்டி நிலவறையாக அமைந்திருந்தது.

பிடிபட்டவர்கள் இருவர் அந்நியர்கள். மற்றவர்கள் நம்மூர் கூலிப்படைகள். விசாரித்ததில் பணத்துக்காக விலைபோனவர்களாகத் தெரியவந்தது..

"தளபதியாரே! நமது மக்கள் அந்நியருக்கு விலைபோவது நமது கவனக்குறைவே. நமது வளங்களைச் சரிவரப் பயன்படுத்தியிருந்தால் அந்நியருக்கு விலை போகமாட்டார்கள். இவற்றைப் பற்றிய கவனத்தில் நாம் ஈடுபடவேண்டும்." அவனது நாவசைவில் அவரது கவனம் இருந்தது. அதிலுள்ள உண்மையை அவரது மனம் ஏற்றுக் கொண்டது.

"ஏதாவது செய்ய வேண்டும். கைது செய்யப்பட்டவர்கள் அத்தனை பேரும் பயிற்சி பெறாத இந்த மண்ணின் இளைஞர்கள். இவர்களை மெல்ல மெல்ல நம்பக்கம் திருப்பவேண்டும். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வாழ்க்கையை மாற்றி அமைக்க வேண்டும். இவற்றை மணிமாறனும் சுகுணனும் செய்து வழிப்படுத்த வேண்டும்." ஒரு புன்னகையைத் தவழவிட்டார்.

"மணிமாறா! சாவாற்றில் இருந்து செய்திகள் ஏதும் வந்ததா? அங்கு நிலைமை எப்படியுள்ளது"? நாகப்பர் மணிமாறனிடம் கேட்டார்.

"அங்கிருந்து செய்திகள் எப்படி வரும்? நாம்தான் இங்கேயே எல்லாவற்றையும் முடித்துவிட்டோமே. அவர்களது சதித்திட்டங்கள் அனைத்தும் இங்கேயே முடிந்துவிட்டன. அனைவரையும் சிறு காயங்களுடன் கைது செய்துவிட்டோமே. அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. நாளை வழமைபோல் எல்லா ஒழுங்குகளும் நடந்தேறும். நான் காலையில் சாவாறு சென்று ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும். உத்தரவு தாருங்கள்." அவன் கேட்டுநின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லது சுகுணனும் உன்னோடு வருவான். நீங்கள் இருவரும் செல்லுங்கள். நமது எதிரிகளைச் சிறைகளில் இருந்து விடுவித்துப் போகாதவாறு பார்க்கும்படி காவலர்களுக்குக் கட்டளையிடுங்கள். கைதிகள் தப்பினால் நமக்கு சிக்கலாகிவிடும்" நாகப்பர் அவர்களது கடமையை விளக்கினார்.

"தளபதியாரே! நான் கூறியவற்றை இட்டுச் சிந்தித்தீர்களா?"

"சிந்தித்தேன். அதற்கு என்ன செய்யலாம் சொல்லு" நடந்து கொண்டே தளபதி கூறினார். நமது மகாவலி நீரைக் கால்வாய்களை அமைத்து தரிசு நிலங்களைப் பகிர்ந்து கொடுத்து மக்களுக்குச் சொந்தமாக்கிப் பயனடையச் செய்வோம். எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வழிசெய்து விட்டால் நம் நாட்டை அவர்களே காப்பார்கள்."

"நல்லதொரு வார்த்தையைச் சொன்னாய். அப்படியே செய்யலாம்." குளக்கட்டு வேலைகள் முடிந்ததும் நிலங்களைப் பகிர்ந்தளிப்போம். பாசன வசதிகளையும் செய்துகொடுப்போம். கால்வாய்களை அமைக்கும் பொறுப்பினையும் நீங்களே பொறுப்பெடுத்துக் கொள்ளுங்கள். ஆமாம் எப்போது கால்வாய்களை அமைக்கப் போகிறார்கள்?"

"நீங்கள் எப்போது ஒப்புதல் கொடுக்கிறீர்களோ அப்போதே தொடங்கிவிடுவோம்."

"நான் அந்தக் கைதிகளைப் பார்வையிட வருகிறேன். இப்படியே போவோம். பார்த்துவிட்டுச் செல்கிறேன். சரியா?" "அப்படியே ஆகட்டும்." நாகப்பரின் குதிரைக்கு முன்னால் சுகுணனின் குதிரை நகர்ந்தது. அதனை முந்திக் கொண்டு மணிமாறனின் குதிரை விரைந்தது. வழிநெடுகிலும் ஆங்காங்கே பாதுகாப்புக்காக ஆட்கள் நிறுத்தப்பட்டிருந்தனர்.

ஒரு ஒற்றையடிப்பாதை வழியாகக் குதிரைகள் விரைந்தன. நாகப்பருக்கு ஒரே திகைப்பாக இருந்தது. அத்துடன் வியப்பாகவும் இருந்தது. கண்மூடிக் கண் திறப்பதற்கு முன் குதிரைகள் நின்றன. இறங்கியவர்கள் கால்நடையாகக் கூப்பிடு தூரம்வரை நடந்தனர். காவற்படை வழிவிட்டு நின்றனர். படிக்கட்டுவழியே இறங்கி நடந்தனர். அவர்களது பாதுகாப்பு நடவடிக்கைகள் நாகப்பருக்கு வியப்பை ஊட்டின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

சிறை நிலத்தடியில் இருந்தது. மழைநீர் உட்செல்லமுடியாதபடி அமைத்திருந்தனர். போதிய காற்றோட்ட வசதி இருந்தது. கைதிகளோடு நாகப்பர் கதைகொடுத்தார். ஒருவன் முன்நின்றார். அவனது முகம் அவனது வாழ்க்கையை வரைந்து காட்டியது.

அன்பாகவே பேசினார். "தம்பி! உனது பெயரென்ன?"

"நல்லதம்பி"

"ஏன் இவர்களோடு சேர்ந்தாய்?"

"வீட்டில் சாப்பாட்டுக்கே வழியில்லை. பயிர் செய்வதற்கு நிலமும் இல்லை. முதலும் இல்லை. எத்தனை நாளைக்குப் பசியோடு வாடலாம்? என்னோடு பிடிபட்டவர்கள் அனைவரும் எதிரிகளின் கூலிப்படைகள். பொருள் தந்தார்கள் கூலிக்கு வேலை செய்கிறோம்." அவன் அழுதபடியே ஒப்புவித்தான். அவனைப்போலவே ஏனையோரும் குறிப்பிட்டனர்.

"உங்களுக்கு நிலமும் பொருளும் தந்தால் உங்கள் நாட்டுக்காக உழைப்பீர்களா?"

"தாருங்கள் நமது நாட்டுக்காக உழைப்போம்."

"அவர்களின் வார்த்தைகளில் அவர்களின் மனவுறுதியைக் கண்டார். நமது மக்களின் தேவைகளைப் புரியாது விட்டோமே. அவர்களது தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றத் தவறிவிட்டோம். மணிமாறா! இவர்களுக்கு மன்னிப்பு வழங்குவோம். அதேபோல் அவர்களுக்கு வேண்டிய அனைத்தையும் செய்து கொடுப்போம். அதற்கு வேண்டியவற்றை உடனடியாகச் செய்யுங்கள். நான் அரசரின் அனுமதியைப் பெற்றுத் தருகிறேன். தம்பிமாரே! உங்களுக்குரிய வசதிகளைச் செய்துதரவுள்ளோம். நமது நாட்டைக் காப்பது உங்கள் கடமை." கூறிக்கொண்டு நடந்தார்.

"நன்றி ஐயா." அவர்கள் கண்ணீரோடு இருகரங் கூப்பி நின்றனர்.

அவரின் மனதில் மணிமாறன் நிறைந்திருந்தான். அவனது சிந்தனை அவரை வெகுவாகக் கவர்ந்திருந்தது. 'உண்மையில் நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களது தேவைகளை நிறைவு செய்திருந்தால் இந்நிலை எந்த நாட்டுக்கும் வராதிருக்கும். மாற்றான் படை நமது நாட்டுக்குள் நுழைவதற்கு நாமே வழிவகுத்துவிடுகிறோம். இந்த நிலையை நீடிக்க விடக்கூடாது'. அவர் தீர்மானித்துக் கொண்டார்.

"எவ்வளவு கச்சிதமாக இந்தச் சிறைக்கூடத்தை அமைத்துள்ளார்கள்." நிலத்தடிச் சிறைக்கூடத்தை நினைந்துகொண்டார். குதிரைகள் விரைந்தன.

"மணிமாறா! சுகுணனுடன் சாவாறு சென்று அங்குள்ள தளபதியிடம் விபரத்தைத் தெரிவித்துவிடு. அவர் சொல்லும் கட்டளைகளை நிறைவேற்றி உடன் செய்தியனுப்பு. மன்னர் வருகையைத் தெரியப்படுத்து." கூறிவிட்டு நகர்ந்துவிட்டார்.

"சுகுணா! வா சாவாறு போகலாம்." மணிமாறன் சத்தமிட்டவாறே தனது குதிரையில் பாய்ந்து ஏறினான். அப்போது நாகப்பர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. மணிமாறா! நானும் உடன் வருகிறேன். குதிரைகள் காற்றாகப் பறந்தன. முத்தரையரின் அறிவுரை முன்னால் நின்றது. எவ்வளவு தூரம் சென்றார்கள் என்று தெரியாது. பிரதான வீதியை விடுத்துக் குறுக்கு ஒற்றையடிப் பாதையால் விரைந்தனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவாறு விரிந்து பசுமை விரித்திருந்தது. சேனைப் பயிர்கள் செழித்துத் தலையசைத்தன. வயல் குடலைப்பருவத்தில் கூத்தடித்தன. முத்தரையரின் மாளிகை தூரத்தே தெரிந்தது. மாளிகையை நோக்கிக் மூன்று குதிரைகளும் விரைந்தன. திண்ணைப் பள்ளிக் கூடங்கள் இயங்கின. சிறார்கள் மகிழ்ச்சியில் ஆடிப்பாடினர். மக்களைக் குடியேற்றிய இடங்களில் பள்ளிக்கூடங்களையும் நிறுவிப் பாடங்களைக் கற்பித்தனர்.. அனைத்துப் பாடசாலைகளுக்கும் காசிநாதர் மேற்பார்வையாளராகவும் கடமையாற்றினார்.

"இதோ நதி பிரியும் இடத்துக்கு வந்து விட்டோம். நதியைக் கடந்து சாவாற்று நகருக்குப் போகவேண்டும். இன்னும் சற்றுத் தூரம் சென்றால் நதி பிரியும் இடம் வரும். அந்த இடத்தினால் செல்வது பாதுகாப்பாக இருக்கும். அங்கேதான் முத்தரையரின் மாளிகை இருக்கிறது." விரைந்து குதிரைகள் பறந்தன. நதி பிரியும் இடத்துக்கு வந்து விட்டார்கள். நதியைக் கடந்து சாவாற்று நகருக்குப் போகவேண்டும். அங்கேதான் முத்தரையரின் மாளிகை இருக்கிறது என நாகப்பர் குறிப்பிட்டார். நதியைக் கடக்க வேண்டும். ஆற்றோரம் எங்கும் மக்களின் ஆரவாரம்.

# 11

அந்தி சாயும் நேரம். இளைஞர்கள் தற்காப்புக் கலைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். முத்தரையர் இடையிடையே அவர்களை நெறிப்படுத்திக் கொண்டிருந்தார். மணிமாறனும், சுகுணனும் குதிரையை விட்டு இறங்கி இளைஞருடன் சேர்ந்து நின்றனர். முத்தரையரின் கண்கள் கழுகுக் கண்கள். அவர்கள் வந்ததைக் கண்டு கொண்டன. நாகப்பரைக் கண்டதும் முன்னால் சென்று "மாகாமத்தின் தளபதியாரே வருக" என வரவேற்றார். நாகப்பரின் முகத்தில் என்றுமில்லாத சந்தோசம் களைகட்டியது. இருவரும் நல்லெண்ணங்களைப் பரிமாறிக் கொண்டனர். இருவரின் முகங்களும் மகிழ்ந்து பூரித்தன. முத்தரையரைப் பற்றி மணிமாறனுக்கு நன்கு தெரியும்.

ஒரு வீரன் தற்காப்புக் கலையில் ஈடுபாடு காட்டாது இருந்ததை மணிமாறன் கண்டுகொண்டான். முத்தரையர் அதனைக் கண்டு கொண்டார். "மணிமாறா! அந்த இளைஞனைக் கொஞ்சம் கவனி." மணிமாறனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்ச்சியும் ஆர்வமும் ஏற்பட்டது. மணிமாறன் உடனடியாகச் செயற் பட்டான். இளைஞனின் உடல்நிலையில் மாற்றம் தெரிந்தது. அனுக்குக் காய்ச்சல் காய்ந்து காண்டிருந்தது. அவன் களைத்திருந்தான். எனினும் அவனது ஆர்வத்தை மெச்சினான். பயிற்சியைக் குழப்பாது அவனை அணியிலிருந்து பிரித்து வைத்தியரிடம் அழைத்துச் சென்றான்.


வைத்தியரின் கண்காணிப்பில் விட்டு விரைந்து வந்தான். அவன் சென்றதும் சுகுணன் பயிற்சியைப் பார்வையிட்டு நெறிப்படுத்தினான்.

"அந்த இளைஞனுக்கு நலமா?"

கேட்டவாறே பயிற்சியைக் கண்காணித்தார். பயிற்சியின் போது எவ்வாறு யாவற்றையும் முத்தரையர் அவதானிக்கிறார் என்பது மணிமாற னுக்குப் புதிராக இருந்தது.

"என்ன மணிமாறா? வியப்பாக இருக்கிறதா? நாட்டைக் காக்கப் புறப்பட்டால் அட்டாவதனம் தேவை. எல்லாவற்றையும் கற்றுக் கொள்ளப் பழக வேண்டும். அந்தத் திறமை உங்கள் இருவரிடமும் நிறையவே இருக்கிறது." முத்தரையர் இலகுவில் யாரையும் இப்படிப் பாராட்டியதில்லை. "எதிர்காலத்தில் நமது தாய்நாட்டிற்கு உங்கள் சேவை அவசியம் தேவை."

"நன்றி தளபதியாரே! நாங்களும் உங்களைப் பின்பற்றுகிறோம். நமது நாடும் மக்களும் நலமாகவும் வளமாகவும் இருந்தால் போதும். நாம் மகிழ்ச்சியாக இருக்கலாம்." மணிமாறனும் சுகுணனும் சேர்ந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலளித்தனர். முத்தரையருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. நேரே அவரின் இல்லத்துக்குக் குதிரைகள் விரைந்தன.

வழிகளில் எங்கும் பசுமாடுகளும், எருமைகளும், ஆடுகளும் எங்கும் தன்னிச்சையாக மேய்ந்து திரிந்தன. பசுமை போர்த்திய வளமான பிரதேசம். முயற்சிகளுடைய மனிதர்கள் வாழும் இடம் சொர்க்கமாகும். சாவாற்றுப் பிரதேசம் சொர்க்கமாக மணிமாறனுக்குத் தெரிந்தது. அதனை சுகுணனிடமும் பகிர்ந்து கொண்டான். அதே எண்ணத்தில்தான் சுகுணனும் மிதந்தான். நேரே முத்தரையர் நீராடும் இடத்துக்கு வந்துவிட்டார்கள்.

"தளபதியாரே இன்று நமது சாவாற்று நதியில் நீராடுவோம். அப்போதுதான் உடல் அலுப்புத் தீரும். சுகமாக இருக்கும். வாருங்கள் மணிமாறா என்ன பார்த்துக் கொண்டு இருவரும் நிக்கிறீங்க. ஆற்றில் இறங்குங்க." கூறிக்கொண்டே ஆற்றில் இறங்கினார். உடல் அலுப்புத் தீரும்வரை நீராடினார்கள். நீராடியதும் முத்தரையரின் மாளிகைக்குச் சென்றனர். விருந்தினர் விடுதியில் தங்கவைத்துவிட்டு பக்கத்தில் இருந்த தனது மாளிகைக்குச் சென்றார். விடுதி மேற்பார்வையாளன் அவர்களைக் கண்டதும் இராசமரியாதையுடன் உபசரித்தான்.

அவர்கள் உடைகளை மாற்றி வந்ததும் சிற்றுண்டி வழங்கினான். சிற்றுண்டி சுவையாக இருந்தது. களைப்பைத் துரத்தியது. தளபதியார் அமைதியாக இருந்தார். அடுத்து இருக்கும் திட்டம் என்னவாக அமையும்? சற்று மௌனம் நிலவியது. இருள்பரவத் தொடங்கியது. விடுதியெங்கும் விளக்குகள் பிரகாசிக்கத் தொடங்கின. தாங்கள் நடத்திய அதிரடியைப் பற்றி உரையாடினர். முத்தரையர் விடுதியின் உள்ளே நுழைந்தார். எழுந்து மரியாதை செலுத்தினர்.

"அமருங்கள். நான் சற்றுத் தாமதித்து விட்டேன். கொட்டியாரப்பற்று வன்னிமை ஒரு செய்தி அனுப்பியிருந்தார். அதையிட்டுக் கலந்துரையாடி முடிவை எடுப்போம். அதற்கிடையில் நீங்கள் எதிரிகளைச் சாடியது பற்றி அறிய விரும்புகிறேன். கூறுங்கள்." ஆவலுடன் கூறி அமைதியானார்.

தளபதி நாகப்பரே விளக்குவார் என மணிமாறனும் சுகுணனும் இருந்தார்கள். நாகப்பர் அழகாக விளக்கினார். முத்தரையரின் முகம் மலர்ந்து கொண்டு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தளபதியாரே! நமது வீரர்களின் களப் பயிற்சிக்கு வேலையும். வேளையும் வந்திருக்கிறது. கொட்டியாரப் பற்று வன்னிமை இளஞ்சிங்கன் வெள்ளையரை எதிர்த்துப் போரிட ஆயத்தமாகி விட்டார். நமது உதவியை நாடிச் செய்தியனுப்பியுள்ளார். நமது மண்ணை எதிரிகள் சூறையாட விடுவதா? நாங்களும் உதவுவோம். இது நமது தார்மீகக் கடமையாகும்" அவர் முடிக்குமுன் கையில் இருச்த வேல் காற்றிலும் வேகமாகச் செல்வதுபோல் மணிமாறனும். சுகுணனும் எழுந்தார்கள்.

அவர்களது ஆர்வத்தைக் கண்டு இரண்டு தளபதிகளும் மகிழ்ந் தார்கள். 'என்ன புண்ணியம் செய்தனை எங்கள் தாய்மண்ணே. இத்தனை உரமுள்ள இளைஞர்களை நீ பெற்றிடவே'. என இறும்பூவெய்தினர்.

## 12

"எப்போது போராடப் போவது" மணிமாறனும் சுகுணனும் வினாவினர். "அவ்வளவு அவசரம் வேண்டாம். இன்னும் ஓரிரு கிழமையுள் செல்லலாம். அதுவரை பயிற்சியில் ஈடுபடுங்கள். நமது கிராமங்களில் இருந்து சிறந்த வீரர்களைத் தேர்ந்தெடுங்கள். கறந்தடித் தாக்குதலில் பயிற்சியளியுங்கள். நமது படையணிக்கு உணவு, மருத்துவம், உடை போன்ற அத்தியாவசியப் பொருட்களைச் சேகரித்து எடுத்துச் செல்ல வேண்டும். அவர்கள் தருவார்கள் என்று காத்திருக்கத் தேவையில்லை. முத்தரையர் விளக்கமளித்தார்.


அவரது விளக்கம் அருமையாக இருந்தது. அவர் எத்தனை போர்க் களங்ளைக் கண்டிருப்பாரோ? அவரது விளக்கம் அவர் கண்ட போர்க் களங்களில் பெற்ற அனுபவத்தைப் பறைசாற்றியது. மணிமாறன் சுகுணனோடு முத்தரையரின் அனுபத்தை வியந்து பாராட்டினான்.

"நாம் நமது வீரர்களைத் தயார்நிலையில் வைக்க வேண்டும். தளபதிகளிடம் விடைபெற்றுச் செல்வோம். சுகுணா! ஆயத்தமாகுவோம்." மணிமாறன் மெதுவாகக் கூறினான்.

"மணிமாறா! இன்று இங்கேயே இரவுப் பொழுதைக் கழிக்கிறீர்கள். தளபதி நாகப்பரைக் கௌரவிக்க வேண்டும். அதற்காக இரவு உணவை என்னோடு உண்ணவேண்டும். கிழக்கில் ஒளிபரவ முன் நீங்கள் புறப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நானும் வெளியில் சென்றுவிடுவேன். புரிகிறதா? எனக்குச் சில கடமைகள் உள்ளன. அவற்றை முடித்துவிட்டு வருகிறேன்." அவர் கூறியவாறே வெளியேறினார். விடுதியினுள் இரவு உணவுக்காக ஏற்பாடுகள் நடடைபெற்று முடிந்தன.

சற்று நேரத்தால் தளபதி முத்தரையர் விடுதியினுள் வந்தார். அவரது முகத்தில் சந்தோசம் குந்தியிருந்து கூத்தடித்தது. கலகலப்பாகப் பேசினார். "தளபதியாரே! நீங்கள் எல்லோரும் நாளைக் காலை என்னோடு வருகிறீர்கள்." பீடிகை போட்டார். "என்றுமில்லாது இன்று முத்தரையர் அழைக்கிறார். அவரே கூறாது நாமாகக் கேட்கக் கூடாது." அவர்கள் மௌனமாக அமைதி காத்தனர்.

கலகலப்புடன் உணவை உண்டனர். முத்தரையர் விடுதியில் விருந்தினர் மாளிகையின் விருந்து மிகச் சுவையாக இருந்தது. இப்படியான உணவினைப் பலநாட்களாக அவர்கள் உண்ணவில்லை. முத்தரையர் இவ்வாறு சுவையான உணவினை உண்பதன் இரகசியம் யாருக்கும் தெரியாது. முக்கியமான தடயங்கள் கிடைத்து அந்தத் தடயங்களை ஆதாரமாக வைத்துப் போருக்குச் செல்லும்போது இவ்வாறான உணவினை ஏற்பாடு செய்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாளை முக்கியமான இடத்துக்கு உங்களை அழைத்துச் செல்ல விருக்கிறேன். காலை சாமக்கோழி கூவுமுன் தயாராக வேண்டும். இது தான் தளபதியாருக்கு நாணளிக்கும் கௌரவமாகும். நான் சற்று கண்ணயர்ந்து விழித்ததும் வந்துவிடுவேன். நீங்கள் ஆயத்தமாக இருங்கள். நேரம் விரைகிறது. நான் வருகிறேன்." அவர்களுக்கு பீடிகை கொடுத்துவிட்டு அங்கிருந்து விரைந்தார்.

"தளபதியாரே! தளபதி முத்தரையர் நமது மூளைக்கு வேலை கொடுத்துவிட்டுச் சென்றார். அது என்னளவாக இருக்கும். உங்களால் கண்டு பிடிக்க முடிந்ததா?" மணிமாறன் வினவினான்.

"மணிமாறா! தளபதி முத்தரையர் எதிரிகளின் நடமாட்டம் பற்றிய தடயங்களை உளவாளிகள் மூலம் அறிந்திருப்பார். எதிரிகளை முறியடிக் கவே எங்களையும் அழைத்திருக்கிறார். நாளை நமது ஆயுதங்களுக்கு வேலையிருக்கும். எதற்கும் ஆயத்தமாக இருப்போம்:" தளபதி நாகப்பர் விளக்கினார்.

"சுகுணா! நாளை நமது வாளுக்கும், வேலுக்கும் வேலை வந்துவிட்டது. வேளைக்கு உறங்கவேண்டும். தளபதி இன்னும் சற்று நேரத்தில் வந்து விடுவார். வா அறைக்குள் செல்வோம்." அவர்கள் இருவரும் புறப்பட்டார்கள். தளபதி நாகப்பரின் அறையினுள் சென்று அவரது படுக்கையைச் செப்பனிட்டார்கள். "சுகுணா! முதல் சாமம் வரை நான் காவல் கடமையில் இருக்கிறேன். நீ இரண்டாம் சாமத்தில் கடமையில் இரு. பின் என்னை எழுப்பிவிடு. பின்னர் தளபதி முத்தரையர் வந்துவிடு வார்." மணிமாறன் விளக்கினான்.

"மணிமாறா! தளபதியார் மாளிகையைச் சுற்றித்தான் காவல் பலமாக இருக்கிறதே, பிறகேன் நமது காவல்?" சுகுணன் ஆச்சரியத்தோடு வினவினான்.

"சுகுணா! எங்கே பலத்த காவல் உள்ளதோ, அங்கே பலவீனங்களும் இருக்கும்." மணிமாறன் பதிலிறுத்தான். "அப்படி என்றால் இங்கேயும் பலவீனங்கள் உண்டா?" "உறுதியாகச் சொல்கிறேன். எங்கேயும் உண்டு. வேண்டுமாயின் நீ அங்கே தெரியும் காவல்தடைகளைக் கடந்து வா. அப்போது நம்புவாய்" மணிமாறன் விளக்கினான். சுகுணன் உடனே செயற்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுகுணா! தற்செயலாக வீரர்கள் உசாராகினால் தளபதியைக் காணச் செல்வதாகத் தெரிவி. ஆனால் அதற்கு அவசியம் இருக்காது. வெற்றியோடு வா" விடைகொடுத்தான். சுகுணன் தனது வாளை எடுத்துக் கொண்டான் அவனது கால்கள் நடந்தன. முதலாவது காவலரணில் வீரர்கள் அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் சுகுணனைக் கவனித்ததாகத் தெரியவில்லை. இரண்டாவது காவலரணில் உள்ள வீரர்கள் நல்ல உறக்கத்தில் இருந்தார்கள். மூன்றாவது காவலரணையும் தாண்டிச் சென்றான். இவ்வாறு சில காவலரண்களையும் தாண்டினான்.

# 13

மணிமாறன் கூறியதை நினைந்து கொண்டான். அசமந்தப் போக்கில் உள்ள வீரர்களையிட்டு நொந்து கொண்டான். அதனையும் தாண்டி அவனது கால்கள் நடந்தன. தளபதி முத்தரையரின் மாளிகைக்குப் பல காவலரண்கள் உள்ளன. அனைத்திலும் காவலுக்கு வீரர்கள் இருந்தனர். ஆனால் ஒன்றிலும் வீரர்கள் காவல் கடமையில் கரிசனையாக இல்லை. அவனது கால்கள் முத்தரையரின் மாளிகையின் மண்டப வாயிலில் நின்றன. நிலைமையை அறிந்ததும் மெதுவாகப் பின் வாங்கி மணிமாறனிடம் வந்தான்

"என்ன சுகுணா? நான் சொன்னதை ஏற்கிறாயா? காவல் வீரர்கள் உன்னை விரட்டியிருப்பார்களே. எப்படி அனுபவம்?" வினவினான்.

"மணிமாறா! எதிரிகள் நமது நாட்டை இலகுவாகக் கைப்பற்றலாம். அவ்வளவு கரிசனையாக நமது வீரர்கள் கடமையாற்றுகின்றனர். நான் தளபதியாரின் அரண்மனை மண்டப வாசல் வரை சென்றேன். என்னைத் தடுத்து நிறுத்த ஒருவரும் முன்வரவில்லை." விசனத்தோடு விபரித்தான்.

"ஒருவேளை உன்னை தளபதியாரின் விருந்தாளி என்று பேசாமல் விட்டிருக்கலாம்." மணிமாறன் புன்னகையோடு கண் சிமிட்டினான்.

"நான் சொல்வது விளங்கவில்லையா? நான் ஒவ்வொரு காவலரணையும் நோட்டம் விட்டுத்தான் சென்றேன். சில காவலரண்களில் வீரர்கள் ஆடுபுலி ஆட்டம் விளையாடிக் கொண்டிருந்தனர். சிலர் நல்ல உறக்கத்தில் இருந்தனர். காவலுக்கு நின்றிருந்த வீரர்கள் காவலரண் சுவரில் சாய்ந்தபடி உறங்கினார்கள். நான் பயந்தபடியே அவர்களைத் தாண்டிச் சென்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இருளில் சிள்வண்டின் ஒலியே கேட்டது." சுகுணன் கடுகடுத்தவாறு ஒப்புவித்தான்.

"சுகுணா! எங்கே பலத்த காவல் உள்ளதோ, அங்கே பலவீனங்களும் இருக்கும். என்று கூறினேன் அல்லவா? இப்போது ஒப்புக் கொள்கிறாயா? நாம் மூவர் தளபதியைச் சந்திக்க வந்ததை எத்தனை உளவாளிகள் பார்த்திருப்பர் அவர்கள் நம்மீது தாக்குதல் நடத்தமாட்டார்கள் என்று என்ன நிச்சயம். நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது நமது கடமை. அதனால்தான் முன்னேற்பாடாக நாம் காவல் கடமையை மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினேன்." மணிமாறன் தனது நிலைப்பாட்டுக்கு விளக்கம் அளித்தான்.

"மணிமாறா! எனக்கு நேரடியான கள அனுபவத்தைக் காட்டி யதற்காக நன்றி கூறுகிறேன். நீ எனது உயிர் நண்பன் என்பதைப் பல தடவைகளில் புரிய வைத்துள்ளாய். இவற்றை மறக்க மாட்டேன்." சுகுணன் குழைவோடு வெளிப்படுத்தினான்.

"நல்லது நண்பனே, நான் உனது காவல் கடமையையும் சேர்த்து முடித்து விட்டேன். நான் சற்று கண்ணயரப் போகிறேன். உனது கடமைப் பொறுப்பேற்றுக்கொள்." மணிமாறன் அவ்விடத்தை விட்டுத் தனது படுக்கைக்கு விரைந்தான்.

சுகுணன் காவல் கடமையில் ஈடுபட்டான். அவனது உள்ளமெல்லாம் தான் நேரில் கண்ட அனுபவங்கள் நிறைந்து சிந்திக்க வைத்தது. நேரம் விரைந்தது கூட அவனுக்குத் தெரியவில்லை.

"சுகுணா! நீ ஓய்வெடு. நான் பார்க்கிறேன். எனக்கு அடுத்தது நீ வரவேண்டும்" கூறியவாறு மணிமாறன் வந்து நின்றான். சுகுணனுக்கு ஆச்சரியம். மனதினுள் வியந்து கொண்டான். அவன் தயங்கித் தயங்கிச் சென்றான். விடுதி மண்டபத்தினுள் சென்று இருளில் நின்றான். தளபதி நாகப்பரின் உறக்கத்துக்குப் பங்கம் வராமல் பார்த்துக் கொண்டார்கள்.

நேரம் மெல்ல நகர்ந்தாலும் கடமையில் இருந்ததால் அது தெரியவில்லை. சரியான நேரத்துக்கு சுகுணன் வந்துவிட்டான். மணி மாறனுக்கு சுகுணனின் கடமையுணர்ச்சி பிடித்துக் கொண்டது. மணிமாறன் ஓய்வெடுக்கச் சென்றான். தனது ஓய்வு நேரம் முடிந்ததும் வந்து சுகுணனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவித்தான். மணிமாறன் கடமையில் இருந்தான். ஒரு உருவம் விருந்தினர் விடுதியை நோக்கி வருவதைக் கவனித்தான். வாளை உருவி உற்றுப் பார்த்தான். அங்கே தளபதி முத்தரையரின் பணியாள் வந்தான். அவன் வரும்போதே சத்தமிட்டு வந்ததால் மணிமாறன் வாளை உறையினுள் வைத்தான்.

பணியாள் முத்தரையரின் கட்டளையை அறிவித்தான். அப்படியே விடுதியாளனுக்கும் செய்தியைப் போட்டுவைத்தான். அவன் வேண்டிய ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினான். மணிமாறன் உசாரானான். தளபதி நாகப்பரின் அறையின் கதவைத் தட்டினான். நாகப்பர் கதவைத் திறந்து வெளியில் வந்தார். அவரை உற்றுப் பார்த்தான். அவர் புறப்பட ஆயத்தமாக இருந்தார்.

"மணிமாறா இன்னும் ஆயத்தமாகவில்லையா.? விரைந்து ஆயத்தமாகுங்கள்." அவர் துரிதப்படுத்தி விட்டு அறையினுள் சென்றார். மணிமாறன் சுகுணனிடம் சென்றான்.

சுகுணன் புறப்பட ஆயத்தமாக இருந்தான். மணிமாறன் புறப்படும் ஆயத்தத்தோடுதான் இருந்தான். இருவரும் மண்டப வாசலில் முத்தரையரை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். முத்தரையர் மண்டப வாசலில் நின்றார். "வணக்கம் ஐயா. வாருங்கள். நாங்கள் தயாராக இருக்கிறோம்." இருவரும் ஒரேநேரத்தில் ஒலித்தனர். சத்தத்தில் நாகப்பர் வணக்கம் கூறியவாறே வெளியில் வந்தார். நால்வரும் இருக்கையில் அமர்ந்தனர். விடுதியாளன் தேநீரை வைத்து விட்டுச் சென்றான்.

" இதோ தேநீர் குடியுங்கள்." தேநீரை முத்தரையரே பரிமாறினார். தேநீரைக் கொடுத்தவாறே "இரவு நன்றாக உறங்கினீர்களா"? என்றார். சுகுணனைப் பார்த்து ஒரு புன்னகையை வீசினார். "சுகுணன் இரவு காவலரண்களில் வீரர்கள் கடமையில் உதாசீனமாக இருந்தார்களா? எனது விடுதிவரை வந்துவிட்டு என்னைச் சந்திக்காது சென்றது தவறல்லவா? மணிமாறா! நீங்கள் இருவரும் எனது இருப்பிடம் வந்து காவல் கடமையில் ஈடுபடுவதா? அது எங்கள் பாதுகாப்பில் நம்பிக்கை இழந்துவிட்டதை அல்லவா காட்டுகிறது"? கூறிவிட்டுச் சிரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

“இது எனக்குத் தெரியாதே” என்று நாகப்பர் கூறினார். “ஐயா! நாங்கள் அந்த எண்ணத்தில் அதனைச் செய்யவில்லை. நாங்கள் எப்போதும் செய்வதையே மேற்கொண்டோம். தவிரவும் நமது நாடு அந்நியரினால் எப்போதும் தாக்குதலுக்கு உள்ளாகலாம். நாம் முன்னெச்சரிக்கையாக இருந்தால் நமது நாடு பாதிக்கப்படாதல்லவா? நாங்கள் வந்த இடத்தில் ஏதும் அசம்பாவிதம் நடந்தால் அது நம் அனைவரையும் பாதிக்குமல்லவா?” மணிமாறன் விளக்கினான்.

“மணிமாறா! உங்கள் இருவரின் இந்தச் செயல் என்னைப் பெரிதும் கவர்ந்து விட்டது. உங்கள் இருவரையும் மனதாரப் பாராட்டுகிறேன். நீங்கள் இப்படிச் சுறுசுறுப்பாகச் செயல்படும்போது நாங்கள் வெறுமனே இருக்கலாமா? உங்கள் செயற்பாடுகளை உன்னிப்பாகக் கவனித்தேன். இவ்வாறுதான் வீரர்கள் இருக்கவேண்டும். எதிரிகள் நம்மை அசைக்க முடியாது. இன்று நாம் செல்வதும் எதிரிகளைச் சாடவே. இது ஒரு கறந்தடித் தாக்குதலே. நாம் மாறுவேடத்தில் செல்லவேண்டும். வழியில் சில விளக்கங்களைத் தருவேன். புறப்படுவோம். வாருங்கள்.” கூறியவாறே முன்நடந்து குதிரையில் ஏறினார்.

நான்கு குதிரைகளும் இருளில் விரைந்தன. பல ஊர்கள் வயல் வெளிகள் விரைந்து கடந்தன. கண்டற்காடு எட்டிப் பார்த்தது. அங்கு இருளோடு இருளாக ஒரு குடிசை தெரிந்தது. முத்தரையரின் குதிரை குடிசையருகில் சென்றது. முத்தரையர் இறங்கினார். மற்றவர்களும் இறங்கினார்கள். சற்று நேரத்தால் ஆறுவீரர்கள் வந்து சேர்ந்தனர்.

அவர்களது முகங்கள் இருளில் சரியாகத் தெரியவில்லை. அவர்கள் சாதாரண விவசாயிகள் போன்றிருந்தனர். அவர்களுக்கு முத்தரையர் தன்னோடு வந்தவர்களை அறிமுகம் செய்தார். ஒருவர் சுடச்சுடத் தேநீர் கொண்டுவந்தார். நால்வரும் தேநீரை அருந்தினர். இந்தக் குளிருக்கும் களைப்புக்கும் தேநீர் சுவைத்தது.

“ஐயா! அந்தக் குடிலில் இருந்து கதைக்கலாம். வாங்க போவோம்.” ஒருவர் அழைத்தார்.

“சீராளா! நீங்க இங்கே எப்போது வந்தீர்கள்?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்க இரவு இங்கேயே தங்கினோம்."

"எத்தனை பேர் இருக்கிறீர்கள்."?

"நீங்க சொன்னதுபோல் ஆறு பேர் இருக்கிறோம்"

தீப்பந்தத்தின் உதவியோடு தாக்குதலுக்கு உரிய பயிற்சி நடந்தது. பத்து பேர் களத்தில் இருந்தனர். சில கறந்தடிப் பயிற்சிகளை முத்தரையர் வழங்கினார். நாகப்பரிடம் சிலவற்றை வழங்கினார். மணிமாறனையும் சில பயிற்சிகளை வழங்கும்படி முத்தரையர் இடமளித்தார். சீராளனும் சில பயிற்சிகளை வழங்கினார். கலந்துரையாடல் மூலம் சந்தேகங்கள் தீர்க்கப்பட்டன. முத்தரையரின் முகத்தில் ஒரு திருப்தி தெரிந்தது.

"வாருங்கள் முக்கிய விதிகளை விளக்குகிறேன்" முத்தரையர் அழைத்த வண்ணம் குடிலுக்குள் சென்றார். சீராளன் உள்ளே சென்று தேநீரை மீண்டும் கொடுத்தான். கேட்காமலே சீராளன் இதனைச் செய்தான். இப்படிப் பலமுறை முத்தரையர் பயிற்சி கொடுத்திருக்கிறார். முத்தரையரின் தேவையை நன்கு புரிந்த வீரனாகச் சீராளன் விளங்கினான்.

# 15

"சரி நாங்கள் இப்படியே சுண்டங்காடு செல்கிறோம். அங்குதான் நமது விருந்தாளிகள் மறைந்திருக்கிறார்கள். நாங்கள் பத்துப் பேர் உள்ளோம். அவர்கள் எத்தனை பேர் இருந்தாலும், வெற்றி நமதாக்குவோம். புறப்படுவோம்" முத்தரையர் முழங்கினார்.

குதிரைகள் வேண்டிய பொருட்களைச் சுமந்து கொண்டு விரைந்தன. முத்தரையர் தனது வீரர்களின் நலனில் கரிசனை உடையவர்.

"சீராளா! சாந்தாப்பணிக்கனில் சிற்றுண்டியோடு பகல் பொழுதுக்கு வேண்டிய உணவையும் எடுத்துக் கொள்வோம். சுண்டங்காட்டில் வேண்டிய மூலிகைகள் உள்ளன. நாகப்பர் அவற்றை நன்கறிவார். பொழுது புலர்வதற்கு முன் நாம் எதிரிகளைச் சுற்றிவளைக்க வேண்டும். விரை வோம்." வார்த்தைகள் அம்பு புறப்படுவதுபோல் பறந்தன. அதற்கேற்பக் குதிரைகள் விரைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஐயா! பகலுணவுக்கு ஏற்பாடு செய்துள்ளேன்." சீராளன் பதிலு ரைத்தான். இருள் வழியெல்லாம் நிறைந்து கண்ணா மூச்சி காட்டியது.

சாந்தாப்பணிக்கன் பிரதேசம் கால்நடைகளின் உணவகம். விலங்குகளுக்கான புல், தண்ணீர் நிறைந்த பிரதேசம். அங்கே கால்நடைகள் தன்னிச்சையாக மேய்ந்து திரியும். சூழவுள்ள கிராமங்களின் மக்கள் தமது கால்நடைகளை விடுவார்கள். தூரத்துக் கிராம மக்கள் அவற்றைப் பாதுகாக்கக் குடில்களை அமைத்துக் காவல் செய்வர். குடில்களில் தீவறைகள் கொழுந்து விட்டு எரியும். தீவறைகளைச் சூழப் பசுக்கள் குளிர்காயும். எருமைகள் கூட்டங் கூட்டமாய் மேய்ந்து திரியும். காவலிருப்போர் ஒரு பெரிய குடிலில் சேர்ந்து இருப்பார்கள்.

சீராளனுக்கு விசுவாசம் உள்ளவர்கள் இங்கிருந்தார்கள். சீராளன் இரவில் இவர்களோடு வந்து தங்கி உறவாடுவான். நாட்டின் அரசியல் நிலைமைகளை விளக்குவார். அவர்களுக்கு வேண்டியபோது தேவையான பொருட்களைக் கொடுப்பார். வேண்டிய போர்ப் பயிற்சிகளை அவ்வப்போது வழங்குவார். விடிய விடிய ஆடல், பாடலுடன் அவர்களோடு இரவு கழியும்.

போர்க் காலங்களில் இங்கு வேண்டிய ஆயத்தங்களை மேற் கொள்வார்கள். சீராளன் உணவுக்கு இங்குதான் ஏற்பாடு செய்திருந்தார். உணவுக்கு வேண்டிய பொருட்களை இவர்கள் ஏலவே ஆயத்தஞ் செய்திருப்பர். இவை முத்தரையரின் ஏற்பாடுதான். வீரர்களுக்கு பால், தயிர் தாராளமாகக் கிடைக்கும். குதிரைக் குளம்பொலியைக் கேட்டதும் குடில்களில் இருந்தவர்கள் ஆயத்தமானார்கள். உணவு தயாரானது. தேநீர் எந்நேரமும் தயாராக இருக்கும்.

சீராளன் முன்னே விரைந்தான். கையை கண்ணுக்கு மேலே பிடித்துப் பார்த்தான். தீவறைகள் தெரிந்தன. ஆட்களைக் காணவில்லை.

"வில்லவா!" சத்தமிட்டான்.

வில்லவன் வில்லில் இருந்து புறப்பட்ட அம்புபோல் வெளியில் வந்தான். பார்வைக்கு வில்லவன் சாதுவாய்த் தெரிந்தான். கடுகு சிறிதெனினும் அதன் கீர்த்தி பெரிது. வில்லவனும் பார்வைக்கு தோற்றப் பொலிவில்லை. ஆனால் செயலில் சூரன். முத்தரையருக்கு வில்லவனின் கீர்த்தி தெரியும். அவர்தான் சீராளனுக்குத் தெரிவித்தார். சீராளன் புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொண்டு வில்லவனைப் பயன்படுத்தினான். அந்தக் குடிலில் இருந்தவர் களுக்கு வில்லவனே தலையாக விளங்கினான். வில்லவன் முன்னால் விரைந்து அனைவரையும் வரவேற்றான்.

"வில்லவா! எத்தனை பேர் இருக்கிறாங்க."?

முத்தரையரின் குரல் முழங்கியது. அவரது கால்கள் குடிலை நோக்கி நகர்ந்தன.

"வில்லவா! நாங்கள் தயாரராக வந்துவிட்டோம். நீங்கள் எப்படி?"

"ஐயா! வாங்க. நாங்கள் தயாராய் இருக்கிறோம். வாங்க உள்ளே போவோம். வில்லவன் அழைத்தான். குதிரைகள் குடில் அமைந்திருந்த இடத்துக்குச் சென்றனர். காவலில் நின்றவர்களும் சேர்ந்து வந்தனர். வில்லவன் சைகை செய்தான். அவர்கள் விரைந்து குடிலினுள் சென்றனர். சற்று நேரத்தில் திரும்பி வந்தனர். தேநீர் அவர்கள் கைகளில் இருந்தது. குதிரைகளில் வந்தவர்கள் காட்டுத் தடிகளினாலான இருக்கைகளில் அமர்ந்தனர். தேநீர் பரிமாறப்பட்டது. சுடச்சுடப் பால்தேநீர் சுவையாகவும், களைப்புக்கு மருந்தாகவும் இருந்தது.

முத்தரையர் சீராளனைப் பக்கத்தில் அழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சீராளா! நாம் இங்கிருந்து வண்டிகளில் செல்கிறோம். அது எதிரிகளுக்குச் சந்தேகத்தைக் கொடுக்காது. வில்லவா! எத்தனை வண்டிகள் இருக்கு."

# 16

முத்தரையரின் புருவங்கள் உயர்ந்து நின்றதை வில்லவன் கண்டு கொண்டான். "ஐயா! வேண்டிய வண்டிகள் உள்ளன. நமக்கு ஐந்து வண்டிகள் போதும். போகும் தூரம் நாலு கட்டைத் தூரம்தான். உணவு கொண்டு செல்ல இரண்டு தேவை." வில்லவன் விபரித்தான். வில்லவன் ஒழுங்க மைப்பதில் வல்லவன். முத்தரையர் அவனிடமே கொடுத்து விடுவார்.

"சரி நாங்கள் பத்துப் பேர் வந்திருக்கிறோம். இந்த முகாமில் இருந்து நான்கு பேர் சண்டையில் ஈடுபட வரலாம். இப்போது சில பயிற்சிகளில் ஈடுபடுவோம். வாங்க." முத்தரையர் அழைத்தார்.

"தளபதி நாகப்பரும் நானும் பயிற்சிகளை விளக்குவோம். நீங்கள் முன்னர் அறிந்த பயிற்சிதான். நீங்கள் நன்கு கவனித்துச் செயற்பட வேண்டும்." அவர் எதிரிகள் பதுங்கி இருக்கும் இடத்தை வரைந்தார். அதில் அவர்கள் பதுங்கி இருப்பதைச் சுட்டிக் காட்டினார். ஒரு குழுவில் எத்தனை பேர் வரை இருப்பார்கள் என்பதைத் தெளிவுபடுத்தினார். யார் யார் தாக்குதலில் ஈடுபடவேண்டும் என்பதை விபரித்தார். சிறைப்பிடித்தல் யாருடைய பொறுப்பு என்பதைத் தெளிவு படுத்தினார். அவற்றைச் செய்து பார்க்க அனுமதி கொடுத்தார்கள். வேண்டிய இடங்களில் திருத்தங்களைச் செய்தனர்.

முத்தரையரும் நாகப்பரும் திருப்தியடைந்தனர். "சரி நாம் புறப் படலாம். ஆயத்தமாகுங்கள். வெற்றி நமதே." முத்தரையர் ஆணையிட்டார். வீரர்கள் துள்ளிக் குதித்தனர். உடைகள் மாற்றப்பட்டன. வண்டிகள் தயாராய் நின்றன. இந்த நேரத்திலேதான் விவசாயிகள் வயல்வேலைக்குச் செல்வார்கள். அயர்ந்து உறங்கும் நேரமும் இதுதான். வண்டிகள் இருளைக் கிழித்துப் புறப்பட்டன.

பல வண்டிகள் போவதும் வருவதுமாக இருந்தன. வண்டிகளில் பயணித்தவர்கள் தங்கள் அனுபவங்களைப் பாடல்களாக்கிப் பாடிச் சென்றனர். மணிமாறனும், சுகுணனும் வாய்க்குள் பாடலை முணுமுணுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன பாடல் இனிக்கிறதா? நீங்களும் பாடலாமே. பாடுங்க." முத்தரையர் அனுமதித்தார். மகாவலியின் மைந்தனுக்குப் பாடல் தண்ணி பட்ட பாடம். மணிமாறன் தனது ஆசிரியர் காசிநாதரை நினைத்தான். அவர் மகாவலியில் நீராடும்போது சொன்ன கண்ணகி கதையும் பாடலும் மனதில் பிரகாசித்தது. காவிரி கலகலத்து ஓடுவதை வாழ்த்தி இளங் கோவடிகள் பாடிய பாடல் அது. காசிநாதர் பாடிய கிராமிய இசையில் பாடினான். காவேரிக்குப் பதிலாக மகாவலி என்று மாற்றிப் பாடினார்கள்.

திங்கள் மாலை வெண் குடையான்
வளையாச் செங்கோல் அதுவோச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி மாவலி(காவேரி)
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன் வாழி மகாவலி

மன்னு மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோல் அதுவோச்சி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி மகாவலி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மன்னு மாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன் வாழி மகாவலி
உழவ ரோதை மதகோசை
உடைநீர் ஓதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி மகாவலி
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்த வெல்லாம் வாய்காவா
மழவ ரோதை வளவன்தன்
வளனே வாழி மகாவலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலைப் பாடிமுடிந்ததும் அதனைக் கேட்டு தளபதி நாகப்பர் காசிநாதரின் நாட்டின்மேலுள்ள பற்றையும் அவரது கற்பித்தல் திறமை யையும் முத்தரையருக்கு விளக்கினார். முத்தரையர் மகிழ்ந்து வாய்விட்டுப் பாராட்டினார். பின்னர் உடனே "இப்போது நமக்கு முன்னால் பெரிய கடமை காத்திருக்கிறது. அதனை வெற்றிகரமாக முடிப்போம்." என்றார். முத்தரையரின் கடமையுணர்ச்சியை நாகப்பர் மெச்சினார். வீரர்களின் உடல்களில் உணர்வலைகள் பொங்கி மோதின. வண்டிகளில் இருந்தவர் களை இறங்கும்படி கட்டளை இட்டுத் தானும் இறங்கினார்.

"நாம் வண்டியில் சென்றால். அந்த ஆரவாரம் எதிரிகளை உசார்ப் படுத்திவிடும். நடந்தே செல்வோம். புறப்படுங்கள்" முத்தரையர் கூறியவாறே முன்னால் நடந்தார். வீரர்கள் பின்னால் தொடர்ந்தார்கள்.

# 17

"ஐயா! எல்லையில் கைலாயர் காத்திருப்பார்."

சீராளன் மெதுவாகக் கூறினான். அந்த இருளிலும் முத்தரையரின் கண்கள் கைலாயனைக் கண்டு கொண்டன. கைலாயன் எல்லையில் இருந்து அரைக் கட்டை தூரம் முன்னேறி வந்து காத்திருந்தான். கைலாயன் வேவுபார்ப்பதில் கெட்டிக்காரன். அவனது வேலையில் முத்தரையர் நம்பிக்கை உடையவர். கைலாயன் முன்னால் வந்து வணக்கத்துடன் வரவேற்றான்.

அவனது முதுகைத் தடவியபடி நலத்தை விசாரித்தார். "ஐயா! நானும் நலம். நமது விருந்தாளிகளும் நலமாக உறங்குகிறார்கள்:" அவன் முத்தரையரின் முகத்தைப் பார்த்தான்.

" இதோ நாங்கள் புறப்படத் தயார். புறப்படுவோம் வாருங்கள்." மெதுவாகக் கூறி முன்னால் நடந்தார். தளபதி நாகப்பரையும் மணிமாறனையும் சீராளனையும் தன் பக்கத்தில் அழைத்தார். அவர்களிடம் தனது திட்டத்தை விபரித்தார். அவர்களது அபிப்பிராயங்களை கேட்டறிந்தார். தம்பக்கமுள்ள பதினாறு வீரர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து கடமைகளை அறிமுகம் செய்தார். அந்தக் குழுக்களின் தலைவர்களாக நாம் செயற்படுவோம். சீராளன் கைது செய்யப்படும் எதிரிகளைக் கைலா யனிடம் ஒப்படைப்பார். கைலாயன் மிகுதியைப் பார்த்துக் கொள்வார்." சற்று நின்று நிதானமாக விளக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னுடன் தளபதியும் மணிமாறனும் எதிரிகளைத் தாக்குவதில் ஈடுபடுவார்கள். அங்கு எதிரிகள் பாலை மரத்தடியைத் தேர்ந்தெடுத்து முகாமிட்டுள்ளனர். மூன்று குழுக்களாகப் பதுங்கியுள்ளனர். நாங்கள் ஐந்து குழுக்களாகச் செல்வோம். மூன்று குழுக்கள் தாக்குதலில் ஈடுபடும். கைலாயர் குழு கைதிகளைக் கவனிக்கும். மற்றவர்கள் காயமுற்றவர்களைக் கவனிக்க வேண்டும்.

"ஐயா, வாங்க. பத்துப்பேர் இருக்கிறம். நாங்கள் தயாராய் இருக்கிறம். கட்டளைக்காகக் காத்திருக்கிறம்." வில்லவன் கூறிக்கொண்டே பின்தொடர்ந்தான். ஏனைய வீரர்கள் தேநீரைத் தயாராக வைத்திருந்தனர். அனைவருக்கும் தேநீர் பகிரப்பட்டது. குடித்ததும் புறப்பட்டார்கள். இம்முறை இருபத்தியொரு வீரர்கள் அணிவகுத்துச் சென்றார்கள். சுண்டங்காடு பரந்து விரிந்து கிடந்தது. வயல்வெளிகளும் தோட்டங்களும் தெரிந்தன. தூரத்தில் காடு தெரிந்தது.

முத்தரையர் மௌனமாக வரும்படி சைகை செய்தார். வயல் வெளியைத் தாண்டினார்கள். அடர்காடு தென்பட்டது. எங்கும் இருள் மண்டிக்கிடந்தது. காட்டுக் கோழிகள் கெக்கலித்தன. மயில்களின் அகவல்கள் சிலிர்ப்பூட்டின. ஒற்றையடிப் பாதை தென்பட்டது. அதனூடாகச் சென்றனர். கூப்பிடு தூரத்தில் தீவறை வெளிச்சம் வழிகாட்டியது.

அடிமேல் அடிவைத்து நடந்தார்கள். முத்தரையர் சைகையால் அனைவரையும் நிற்கச் செய்தார். தான்மட்டும் நடந்தார். தளபதி நாகப்பரும் மணிமாறனும் பின்தொடர்ந்தார்கள். காவல் கடமையில் ஆட்கள் நிற்பதைக் கண்டு கொண்டார். தளபதி நாகப்பருக்கும் மணிமாறனுக்கும் சுட்டிகன் காட்டிக் கட்டளையிட்டார். மூவரும் இன்னும் முன்னேறி நோட்டம் விட்டனர். வீரர்கள் உறக்க மயக்கத்தில் இருந்தனர்.

சில்வண்டுகள் ஓசையெழுப்பிப் பாடின. அங்கிருந்து மணிமாறனைச் சைகை ஒலியால் அழைத்து வீரர்களை வரவைத்தார். அவர்கள் முன்னால் வந்தனர். அந்த இருளிலும் முத்தரையரின் கட்டளைகளை விளங்கிக் கொண்டனர். வீரர்கள் குழுக்களாகி தாக்குதலுக்குத் தயாராக நின்றனர். எதிரிகள் மூன்று குழுக்களாகவே குழுமியிருந்தனர். அவர்களும் ஆயத்தமாகவே இருந்தனர். மணிமாறன் எதிரிகள் நிலைகொண்டிருப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு அவதானித்துக் கொண்டான். போர்முனையில் யாருடைய தாக்குதல் முந்துகிறதோ அவர்கள் வெற்றியடைய வாய்ப்புக்கள் அதிகம் என்பதை அவன் உணர்ந்திருந்தான்.

# 18

சரியான நிலையை மணிமாறன் தீர்மானித்தான். அந்நிலைகளில் தமது வீரர்களை நிறுத்திக் காத்திருந்தான். முத்தரையர் தாக்குதலுக்குரிய ஒலியைக் கொடுத்தார். அதற்காகக் காத்திருந்த வீரர்கள் ஒரே நேரத்தரில் பாய்ந்து தாக்கினர். எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத தாக்குதல். எதிரிகள் நிலை தடுமாறிவிட்டனர். மணிமாறனின் வாள் எதிரியின் மார்பைக் குறிபார்த்தபடி இருந்தது. சுகுணன் எதிரியின் கைகளைக் கட்டினான். பனிக்குளிரில் போர்த்திப் படுத்திருந்தோர் அப்படியே கைதிகளாகப் பிடிபட்டனர். செய்வதறியாது உயிர்தப்ப ஓடியவர்களைக் காத்திருந்த கைலாயர் குழுவினர் கைது செய்து கட்டிப் போட்டனர்.

முத்தரையர் ஒரு குழுவினரை அப்படியே சிறைப்பிடித்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபதி நாகப்பர் இன்னொரு குழுவினரைச் சிறைப் பிடித்தார். எதிரிகளின் பதில் தாக்குதலுக்கு இடமில்லாது வெற்றிகரமாக கறந்தடித் தாக்குதல் நடந்தேறியது. வெள்ளையர்கள் ஆறுபேர் இருந்தனர். மிகுதியானவர்கள் சுதேசிகளே. எதிரிகள் தங்கியிருந்த முகாம் முத்தரையரின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது.

வெள்ளையர்களை மிகப் பாதுகாப்பாக நிலத்தடிச் சிறையில் சிறைவைத்தனர். சுகுணன் பொறுப்பாக அமர்த்தப்பட்டான்.

உள்ளூர் வாசிகள் திறந்த வெளிச் சிறையில் விடப்பட்டனர். அவர்களுக்கு நாட்டுப்பற்று, மொழிப்பற்று, கல்வி விவசாயம் போன்ற பல செயற்பாடுகள் பற்றியவற்றில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அந்த வெளிச் சிறை மகாவலிக் கரையயோரமாக அமைந்திருந்தது.

குழுக்களாகப் பிரிக்கப் பட்டு இரண்டு ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு பயிர்த் தொழிலில் ஈடுபடுத்தினர். அவர்களுக்கு வேண்டியவற்றை அவர்களே தயாரிக்க பணிக்கப்பட்டனர். வளமான வண்டல் செறிந்த மண். கரையோர மெங்கும் தாழை மரங்கள் கூடாரங்களாக நிழல் விரித்துக் குடைபிடித்தன. மலர்கள் காற்றில் வாசத்தைப் பரப்பியது.

ஒவ்வொருவரின் நிலத்தினிலும் சிறிய வீடு அமைக்கப்பட்டு விட்டது. கொட்டியாரக் குடாக்கடல் உப்பு நீர் கண்டல் கண்ணா வளர உதவியது. உயர்ந்து வளர்ந்த கண்ணாக்களில் காவல் குடில்கள் இருந்தன. வெளியில் இருப்போருக்கு இவை தெரியாது. காவலுக்கு இருப்போர் வேறு இடங்க ளுக்குச் செல்லமுடியாது. அனுமதி பெற்று பதிலுக்கு ஆட்கள் வந்தபின்னரே செல்லாம். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கே செல்லலாம்.

உரிய நேரத்துக்குக் காவல் கடமையில் இருப்போருக்குத் தேநீர், உணவு வழங்கப்படும். இது யாருக்கும் தெரியாமல் செய்யப்படும். பயிற்சி பெற்றவர்களே இச்சேவையில் ஈடுபடுத்தப் படுவர். மகாவலிக் கரையோரம் தோட்டங்ளும், வயல்களுமாகப் பச்சைப் பசேலாக இருந்தது.

மணிமாறனும் சுகுமாறனும் நாகப்பரின் திடீர் அழைப்பை எதிர்பார்க்கவில்லை. என்னவாக இருக்கலாம்? அவர்கள் மனதில் கேள்வி மேல் கேள்விகளாக எழுந்து கொண்டே இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியனுற்றில் நாகப்பர் இல்லை. அவர் தம்பைநகர் சென்றிருப்பதாக செய்தியை விருந்தினர் விடுதிப் பொறுப்பாளர் மகான் மூலம் அறிந்தனர். "நீங்கள் வருவீர்கள் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கும்படி கூறினார். எல்லா ஏற்பாடுகளும் செய்தாகிவிட்டது. குதிரைகளை நான் கவனிக்கிறேன். நீங்கள் குளித்துட்டு வாங்க." கூறிவிட்டுக் குதிரைகளின் சேணங்களை அவிழ்த்துவிட்டு கொள்ளுக் கொடுத்துத் தண்ணீரும் வைத்து விட்டு மகான் வந்தான்.

"உணவு மேசையில் உணவு தயாராய் இருக்கிறது. வாங்க சாப்பிடு வோம்." மகான் அழைத்தான். இன்னும் இருவர் வந்து சேர்ந்து கொண்டனர். உணவு முடிந்தபின் உறக்கம் கண்களை மறைத்தன. எனினும் எப்போதும் எதிரிகள் தாக்கலாம் என்ற நினைவோடே இருந்தனர்.

"மணிமாறா இங்கு பயமில்லை. தளபதியின் மாளிகை இருக்கிறது. சுற்றிவரக் காவலரண்கள். நிம்மதியாகச் சற்று சாய்வோம்." சுகுணன் பாயை விரித்தான். மணிமாறன் சிரித்தான். "அப்படியா நீ தளபதி வந்து விட்டாரா என்று பார்த்து வா. போவது கவனம். காவலரண் நிறையவே உண்டு. மணிமாறன் சுகுணனிடம் ஒரு சிரிப்போடு சொன்னான்.

சுகுணன் உடைவாளோடு புறப்பட்டான். முதலாவது காலரணை அண்மித்ததும் மெதுவாக நடந்தான். கடமையில் இருந்தோர் வழமை போல் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருந்தனர். முன்னால் கடமையில் இருந்தவன் சுவரில் சாய்ந்தவாறே உறக்கத்தில் ஆழ்ந்திருந்தான். அங்கிருந்து மெதுவாக நகர்ந்தான். இரண்டாவது அரணில் அனைவரும் உறக்கத்தில் இருந்தனர். அவர்களின் ஈட்டிகளை எடுத்துக் கொண்டான். அடுத்தடுத்த காவலரண்கிலும் அதேநிலைதான். அப்படியே தளபதியாரின் அரண்மனைக்குள் இடைஞ்சல் ஏதுமில்லாது நுழைந்துவிட்டான்.

# 19

சுகுணனைக் கண்டதும் தளபதியாருக்கு மகிழ்ச்சி பொங்கியது. "என்னை மணிமாறன்தான் நீங்கள் வந்து விட்டீர்களா என்று பார்த்து வரச்சொன்னான். அதுதான் வந்தேன். சிறந்த பாதுகாப்பு அரண்களின் பாதுகாப்பு முறைகளையும் பார்வையிட்டு தகவல்களைச் சொல்லும்படி கூறினான். சான்றுகள் கிடைத்தால் கொண்டுவரும்படியும் சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை ஒரு கட்டாகக் கட்டிக் கொண்டு வந்தேன்.. நல்ல பாதுகாப்பு முறை இங்குண்டு. மணிமாறன் முன்னால் காட்டுகிறேன். போகலாம் வாருங்கள்." அவர்கள் நடந்தார்கள்

வழியில் காலரண்களை எட்டிப் பார்த்தும் வாருங்கள். காவலர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளமையையும் பாருங்கள். அவர் எட்டிப் பாக்கும்போது அவர்கள் நல்ல உறக்கத்தில் இருந்தார்கள். எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டு சென்றார். முன்னால் சுகுணன் சென்றான். தளபதி மெதுவாகவே சென்றார். அவர்களின் வருகையை மகான் மணிமாறனுக்குத் தெரிவித்தான். மணிமாறன் தளபதியை விடுதி வாயிலுக்கு வந்து வரவேற்றான்.

"வாங்க தளபதியாரே! தங்கள் வரவு நல்வரவாகட்டும்." அவருக் குரிய இருக்கையை எடுத்து வைத்தான். அவர் இருக்கையில் அமர்ந்தபின் மணிமாறன். இருந்தான். சுகுணன் தான் கொண்டு வந்த பொருட்களைக் காட்சிப்படுத்தினான். இவற்றை எங்கே, எப்படி எடுத்தாய்? மணிமாறன் வினவினான். சுகுணன் விபரித்தான். தளபதிக்கு ஒருபக்கம் மகிழ்ச்சி. மறுபக்கம் காவல் கடமையில் இருந்தவர்களின் கவனமின்மை. அதனை வெளிக்காட்டாமல் "இன்று நீங்கள் இங்கு தங்குவதால் மிகக்கவனமாக இருப்பீர்கள். நானும் இருப்பதால் காவல் கடமையில் இருப்பவர்களை பயமின்றி இருங்கள் என்று கூறியிருந்தேன். அதுதான் அவர்கள் அசட்டையாக இருந்திருக்கிறார்கள்." தளபதியார் பூசி மழுப்பினார்.

"தளபதியாரே மன்னிக்க வேண்டும். நாம் அப்படி இருக்கக் கூடாது. ஆபத்து நம் நாட்டைச் சூழ்ந்துள்ளது. வெளிநாட்டார் நம் நாட்டைந் சூறையாட நினைக்கிறார்கள்." என்றான்.

"அதற்காகத்தான் உங்களை அழைத்தேன். இரண்டு நாட்கள் நீங்கள் இங்கு நிற்கவேண்டும். ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களும் நாளைக் காலை வந்துவிடுவார்கள். மாறன்! இன்னும் பலர் எந்நேரமும் வரலாம். ஆயத்தமாக இரு. உனது வீட்டுக்கு நீ கேட்ட அத்தனையும் போய் சேர்ந்து விட்டது. கவலையின்றி கடமையைச் செய்" கூறிவிட்டு புறப்பட ஆயத்தமானார். அவரின் பின்னால் மணிமாறன் சென்றான். நான் ஆயத்தமாகி விட்டேன். நாளைக் காலை இவற்றைப்பற்றிய விபரங் களை விளக்குவேன். நேரமாகிறது நீ போய் ஓய்வெடு. காலை சந்திப்போம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபதி ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தவாறே சென்றார். பின்னால் சென்று வழியனுப்பி விட்டு வந்தான்.

அதிகாலை தளபதி இரவுக் காவல் கடமையில் இருந்தவர்களை தங்கள் ஆயுதங்களோடு வரும்படி கட்டளை விடுத்திருந்தார். பலர் கலக்கத்துடன் வந்தார்கள். அவர்களின் ஆயுதங்களுக்கு என்ன நடந்து? அவர்களுக்குள் சலசலப்பு. தளபதி வந்ததும் சசலசலப்பு ஓய்ந்தது. அனைவரும் எழுந்து நின்றார்கள். அவர்களின் மரியாதையை ஏற்றபின் தளபதி அமர்ந்தார். அவரும் அமர்ந்தார்.

"வீரர்களே! உங்களை நம்பி நமது நாடும் மக்களும். உள்ளனர். ஆனால் சிலர் அதனை மறந்து விடுகிறார்கள். முதலில் உங்கள் உயிர் முக்கியம். உங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஆயுதங்கள் தரப்பட்டுள்ளன. அவை தொலைந்தால் உங்கள் உயிர் உங்களிடம் இருக்குமா? இரவு காவல் கடமையில் இருந்தவர்களின் ஆயுதங்களை பிறர் கைப்பற்றும் வரை அசட்டையாக இருப்பதா?" கடும் கோபத்தோடு கூறினார். ஆயுதங்களை இழந்தவர்கள் முகங்களில் அசடு வழிந்தது. சிலரின் கண்களில் கண்ணீர் கசிந்தது. யார் முகத்தையும் பார்க்க முடியாதபடி மறைத்தது.

"நாங்கள் செய்த தவறை எண்ணி வருந்துகிறோம். எங்களை மன்னியுங்கள். இனி இப்படி நடக்காது தளபதியாரே" உறுதியளித்தனர்.

## 20

அனைத்துப் படைவீரர்களுக்கும் செய்தி அறிவிக்கப்பட்டது. அனைவரும் உரிய நேரத்துக்கு முதலே குழுமிவிட்டனர். தளபதி நாகப்பரின் வருகைக்காகக் காத்திருந்தனர். வீரர்களின் உள்ளங்களில் ஒருவித பய உணர்வு குடிகொண்டிருந்தது. மணிமாறன், சுகுணன்,கைலாயர், வில்லவன், அனைவரும் வந்திருந்தனர். தளபதி வந்து சேர்ந்தார். "வீரர்களே நமக்குப் பாரிய பொறுப்புக் காத்திருக்கு. போர்த்துக்கேயர் கோட்டை ஒன்றை கொட்டியாரக் குடாக்கடலின் அக்கரையில் கட்டி முடித்துவிட்டார்கள். அக்கோட்டையில் இருந்து உள் நாட்டினுள் ஊடுருவும் திட்டம் உள்ளதாக முத்தரையர் செய்தி அனுப்பியிருந்தார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாம் காத்திருக்க முடியாது. கொட்டியாபுரத்து வன்னிமை இளம் சிங்கன் நாளை போர்த்துக்கேயருக்கு எதிராகத் திடீர்தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளார். நாங்கள் கறந்தடித் தாக்குதலைத் தொடக்குவோம். மணிமாறா! சுகுணன், வில்லவன், சீராளன் நால்வரும் உடனடியாகச் சென்று களநிலவரத்தின் விபரத்தை அறிந்து வந்து தாக்குதலுக்குச் செல்ல வேண்டும். அனைவரும் தயாராய் இருங்கள்" நாகப்பர் கட்டளையிட்டார். "நாங்கள் தயார் நிலையிலேயே இருக்கிறோம். உங்கள் கட்டளை கிடைத் ததும் புலியெனப் பாய்வோம்." பதில் பறந்து வந்தது.

மணிமாறன் குழுவினர் வந்துவிட்டனர். அவர்களுக்காகவே காத்திருந்தவர் போல் தளபதியார் துள்ளி எழுந்தார். "களநிலைவரம் எப்படி? தாக்குதல் ஒத்திகை பார்ப்போமா"? என்றார்.

நாங்கள் ஒருமுறை ஒத்திகை பார்த்தோம். நான்கு பிரிவாகுவோம். ஒரு பிரிவு இறால்குழி வழியாகப் பாயும். இன்னுமொன்று குடாக்கடல் பிரியும் இடத்தில் குறுக்கறுத்துத் தாக்குதல் நடத்தும், மற்றொரு பிரிவு கிழக்குப் புறமாக ஊடறுத்து தாக்கும், கைலாயர் பிரிவு காயப்பட்டவர் களையும், கைதிகளையும் கட்டிப் போடுதல் என மணிமாறன் விபரித்தான். தளபதியார் மகிழ்ந்தபடியே சென்றார்.

மணிமாறனின் கண்கள் சூழலைத் துளாவின. சூரிய ஒளி கவிழும் நேரம், ஆளையாள் தெரியாதளவு இருள் மூடிக்கொண்டு வந்தது. மணிமாறன் தனது படையணித் தலைவர்களை அழைத்தான். அவர்கள் வந்து நின்றனர். கறந்தடி பற்றிய பயிற்சியை மீட்டுப்பார்த்தனர். தளபதிக்குச் செய்து காட்டவேண்டும். இந்த ஆர்வம் அவர்களை ஆட்கொண்டது. தளபதி வந்தார். சுகுணன், வில்லவன், கைலாயன், மணிமாறன் குழுவினர் தாக்குதலுக்குத் தயாராய் நின்றனர்.

எவ்வாறு தாங்கள் தாக்குதலை மேற்கொள்ள உள்ளார்கள் என்பதைச் செய்து காட்டினார்கள். எதிரிகள் எதிர்பாராத நேரத்தில் தாக்கி அழித்தல், யாரையும் தப்பி ஓடாமல் கைது செய்து சிறைப்படுத்தல் எனச் செய்து காட்டினர். "மணிமாறா! தளபதியார் மணிமாறனைத் தனியே அழைத்தார். போர்த்துக் கேயரிடம் எத்தனை பீரங்கிகள் உள்ளன. மணிமாறன் தளபதியாரின் வினாக்கள் வருமுன்னரேயே அவை எவ்வாறு எத்திசையில் குறிபார்த்து வைக்கப்பட்டுள்ளன. அத்தனை விபரங்களையும் விரிவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமாறன் முன்வைத்தான். "நான்கு பீரங்கிகளும் கோட்டைச் சுவரின் மேல் வைக்கப்பட்டுள்ளன. கோட்டைச் சுவரினை அண்மித்தால் நாம் நிற்பது எதிரிகளுக்குத் தெரியாது. கோட்டைச் சுவரில் இருந்து ஒரு கிலோ மீற்றர் துாரத்துக்கு அப்பால்தான் குண்டுகள் விழும். இடையில் நிற்பவர்க ளுக்குப் பாதிப்பு ஏற்படாது." சுகுணன் வரைபடத்தை எடுத்து விரித்தான்.

டச்சுக்காரர் 1622ல் இலங்கையில் கட்டிய முதற்கோட்டை இதுதான். கண்டி அரசன் செனரத்துக்கும், டச்சுக்காரருக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் கொட்டியாரக்குடாக்கடலின் கிளையாற்றின் ஓரமாக, மகாவலியின் ஒரு கிளை செல்லுமிடத்தில் கோட்டை கட்டப்பட்டது. போர்த்துகேயரின் ஆதிக்கம் திருகோணமலை தொடக்கம் கொட்டியாரக்குடா வரை பரவியிருந்தது. அதைத் தடுக்குமுகமாக டச்சுக் காரருக்குக் கோட்டை கட்டுவதற்கு கண்டி அரசன் அனுமதி கொடுத்தான். அது அரைவாசி கட்டிமுடிக்குமுன் போர்த்துக்கேயர் அழித்துவிட்டனர். ஆனாலும் திருகோணமலை, கொட்டியாரக் குடாக்கடல் பகுதியின் பாதுகாப்புக் கருதி டச்சுக்காரர் 1658ல் கோட்டையைக் கட்டி முடித்துவிட்டனர்.

டச்சுக்காரர் 1682ல் வான் ஸ்பில் புர்ஜோன் தலைமையில் இலங்கைக்கு வந்தனர். அதே காலத்தில் கண்டியை விமலதர்ம சூரியன் ஆண்டுவந்தான். போர்த்துக்கேயர் கண்டியைக் கைப்பற்ற பலவழிகளைக் கையாண்டனர். அதனை முறியடிக்க டச்சுக்காரரோடு கொட்டியாரத்தில் கோட்டை கட்டுவதற்கான உடன்படிக்கையை கண்டி மன்னன் ஏற்றான். போர்த்துக்கேயரிடம் இருந்து கைப்பற்றிய 3 கப்பல்களையும் கையளித்தான்.

1612 ல் டச்சுகப்பல் தலைவன் மாசிலஸ் டி பொகொவர் கண்டி அரசனை சென்று சந்தித்து கொட்டியாபுரத்தில் கோட்டை கட்டுவதற்கான பேச்சுவார்த்தை நடத்தினான். போர்த்துக்கேயரை எதிர்கொள்ளவும், வணிகம் செய்யவும் அரசனின் அனுமதியைப் பெற்றனர்.

## 21

போர்த்துக்கேயக் கப்ரன் சைமன் கொறியா மாற்றுவழியைக் கையாண்டு கொட்டியாரக் குடாவுக்குள் புகுந்து கோட்டையைத் தகர்த்து விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்திரங் கொண்ட அரசன் கூளிகுட் என்ற கப்பல் தலைவனையும் ஐந்து கப்பல்களையும் டச்சுக்காரருக்கு வழங்கினர். ஆனால் அரசன் டச்சுக்காரருடன் ஏதும் உடன்படிக்கை செய்யவில்லை.

1629 ல் கண்டி அரசன் செனறத் போர்த்துக்கேயருடன் றன்டெனிய என்ற இடத்தில் போரிட்டு வெற்றிபெற்றான். கொழும்பைச் சுற்றி வளைத்தான். ஆனால் போத்துக்கேயர் கொச்சின் உதவியை நாடி விரைந்து பெற்றனர். அரசன் பின்வாங்கினான். கண்டியை தனது மகன் இராஜசிங் கனிடம் ஒப்படைத்தான்.

ஊவாவை குமாரசிங்கனிடமும், மாத்தளையை விஜயபாலனிடமும் ஒப்படைத்தான். 1635 ல் கண்டி அரசன் செனறத்தின் மறைவுக்குப் பின் போர்த்துக்கேயர் கண்டியைத் தாக்கினர். அரசன் நில்லம்பே என்ற இடத்துக்குப் பின்வாங்கினான். போத்துகேயப் படைகள் தொடர்ந்து தாக்கினர். கனந்னொறுவ என்ற இடத்தில் போத்துக்கேயப் படைகள் கொல்லப்பட்டனர். விஜயபாலாவைக் கைது செய்ய முயற்சிகள் நடந்தன. ஆனால் விஜயபாலா கோவாவுக்கு தப்பி ஓடிவிட்டான். விஜயபால கத்தோலிக்க சமயத்தைத் தழுவிக் கொண்டான். கோவாவிலேயே இறந்துவிட்டான். ஊவா மன்னன் குமாறசிங்கவும் இறந்துவிட்டான். கண்டி மன்னன் இராஜசிங்கன் போர்த்துக்கேயரின் சக்தியை ஒழிக்க டச்சுக்காரரின் உதவியைக் கோரி பட்டேவியாவுக்கு செய்தி அனுப்பினான். .

பார்த்தவுடனேயே தளபதியார் புரிந்து கொண்டார். "கண்மூடிக் கண் திறக்குமுன் தாக்குதல் முடியவேண்டும். ஒரு நாழிகைப் பொழுதையும் வீணாக்கக் கூடாது. உரிய நேரத்தில் தேநீர் வழங்க வேண்டும். நம்மைவிட எதிரிகள் உசாராக இருப்பார்கள். பீரங்கி முழக்கம் பயம் காட்டும். இது நமது நாடு. எதிரிகளுக்குச் சந்தர்ப்பத்தை நாம் வழங்கக் கூடாது. காலை யில் கோட்டை இருந்த இடமே தெரியாமல் ஆக்கவேண்டும். புரிகிறதா?" தளபதியார் உறுதியோடு கூறினார். "இப்போது முன்நிலவு. நிலவு மறையும். அப்போது நாம் முன்னரங்கில் தாக்குதலுக்குத் தயாராக நிற்கவேண்டும். நடுச்சாம வேளையில் தாக்குதலைத் தொடங்கலாம். வெற்றி நமதே"

தளபதியாரின் அறிவுரையை மனங்கொண்டனர். தளபதியார் புறப்படத் தயாராகி விட்டார். முன்நிலவு கீழிறங்கிக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு உதவும் படையணியோடு உரையாடினார். அவர்களுக்கு வேண்டிய அறிவுரைகளையும், பல செய்முறைகளையும் விளக்கினார்.

சுகுணனின் படையணி கோட்டைச் சுவரை அண்மித்தது. எந்தப் பீரங்கியும் முழங்கவில்லை. கோட்டைச் சுவரின் நிழலோடு நிழல் ஒட்டியதுபோல் தயாராகி நின்றார்கள். கைலாயரின் அணி ஆயத்தங்களோடு நின்றிருந்தது. அவர்களது ஆயுதங்களாக வாளும், உடைவாள்களும், வேலும் இருந்தன. உணவை உட்கொண்டால் உறக்கம் ஆட்கொள்ளும். தேநீர் உற்சாகத்தைக் கொடுக்கும்.

வாளும், உடைவாளும், வேலும் விளையாடின. போர்த்துக்கேயருக்கு தங்கள் ஆயுதங்களை எடுக்க நேரம் கிடைக்கவில்லை. கொட்டியாபுரத்து வன்னிமை இளஞ்சிங்கன் தனது படையணியுடன் போர்த்துக்கேயர் மீது பாய்ந்து தாக்கத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தார்.

கொட்டியாபுரத்துக் கிராமிய மக்கள் பலரும் இளஞ்சிங்கன் வன்னிமையோடு சேர்ந்து கொண்டனர். ஒரே நேரத்தில் தம்பலகாமம் கிழக்குப் பிரதேச வன்னிமைகள் முத்தரையரும், தளபதி நாகப்பரும் முன்னால் நகர்ந்தனர். பின்னால் பெரும் படையணி தொடர்ந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தமின்றி, சுற்றிவளைப்புகள் ஒருங்கிணைந்து செயற்பட்டதன் விளைவு வெற்றியைத் தீர்மானித்தது. எதிரிகளுக்குச் சந்தர்ப்பமே கொடுக்க வில்லை. கோட்டையைக் காவல் செய்த படையணி கோட்டை விட்டு விட்டு விட்டது. காவலில் நின்ற படையணி கோட்டை அகழிக்குள் பிணங்களாக வீழ்ந்தன. போர்த்துக்கேயரின் பீரங்கிகள் முழங்கின. அந்த பீரங்கிகளின் முழக்கங்களைக் கேட்கப் போர்த்துக்கேயர் இல்லை. கைலாயரின் பிடியில் சிக்கிய சுதேசிகள் கட்டுண்டு கிடந்தனர். அவர்கள் அனைவரையும் கீழடிச் சிறையில் அடைத்தனர். உரிய நேரத்துக்கு உணவு கொடுத்தனர். அவர்களின் களைப்பைப் போக்கினர்.

போர்த்துக்கேயரின் கோட்டை இருந்த இடம் தெரியாமல் சிதைந்து, சிதறிக் கிடந்தது. அழிந்த கோட்டையை மக்கள் பார்வை யிட்டுச் சென்ற வண்ணம் இருந்தனர். இறந்த போர்த்துக் கேயர் உடல்களை மரியாதையுடன் அடக்கம் செய்தனர். இப்போது மக்கள் பெருக்கம் காரணமாக கோட்டை அழிந்த இடத்தில் ஒரு முஸ்லம் பாடசாலை உருவாகிவிட்டது. அந்தப் பாடசாலையை சிறப்பாகப் பாடசாலை அதிபர் நடத்துகிறார். இயற்கை அழகு சூழ்ந்து, வெண்கண்ணாப் புதர்கள் செழித்து வளர்ந்து, மூச்சு வேர்கள் வெளிவந்து மூச்செறியும். பாடசாலைப் பிள்ளைகள் வெண் கொக்குகள் போல் பாடசாலை வகுப்பறைகளை நிரப்பிக் கொண்டிருந்தனர். எங்கும் மகிழ்ச்சி உப்புநீர் சிற்றலைகள் சிலிர்த்தன.

"ஏறுவெள்ளம் ஏறிவந்து சூழும் -அதை
எதிர் கொண்ட மீனினமும் நீந்தும்
வேர்முனைகள் மூச்செறிந்து வெடிக்கும் - பயந்து
வெருண் டெழுந்து குஞ்சலறி நடுங்கும்"

என்ற பாடலைப் பாடி நடித்தனர்.

## 22

நிலத்தடிச் சிறையைப் பார்வையிட முத்தரையர் தலைமையில் தளபதி நாகப்பர், மணிமாறன், சுகுணன், வில்லவன், சீராளன், கைலாயனுடன் இன்னும் பலர் சென்றனர். ஒவ்வொருவராக வரிசையில் வந்தனர். அவர்களுடன் மிகவும் மரியாதையுடனும், அன்பாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடினர். சிறைப் பட்டவர்களின் கதை உருக்கமாக இருந்தது. மகாவலியின் மைந்தர்கள் நம்நாட்டுக்கு எதிராக, அந்நியரின் கூலிப்படைகளாகச் செயற்படுவதை முத்தரையரால் தாங்க முடியவில்லை. "இன்றோடு இதற்கு ஒரு முடிவுகட்டவேண்டும். மணிமாறா! இவர்களுக்குக் கொடுக்கும் நிலத்தில் பயிரிட்டு வருவாய் ஈட்டும்வரை வேண்டியவற்றை நமது பண்டசாலையில் இருந்து வழங்குவோம். அதேவேளை அவர்களின் வீடுகளில் உள்ளோருக்கும் வாழ்வாதாரம் வழங்கி வாழவைப்போம். இவர்கள் நம் நாட்டு மக்கள். வழங்கும் நிலத்தில் சிறிய வீடும் அமைத்துக் கொடுப்பது நமது கடமை. இவர்கள் தமது வீட்டையும், நாட்டையும் காக்கும் வீரர்கள். இவர்களது நலனில் உங்கள் கவனம் இருக்கட்டும். சரியா? தளபதியாரே சந்தேகம் இருப்பின் கூறுங்கள்." முத்தரையர் முடித்தார்.

மக்களிடையே சலசலப்பு. அருமையான சிந்தனை. இந்த வாய்ப்பு முதலில் கிடைத்திருந்தால் இந்த நிலை நமக்கும், நமது நாட்டுக்கும் வந்திருக்குமா? தமக்குள் பேசிக் கொண்டனர். அதிகாலை தொடக்கம் பொழுதுபடுமட்டும், தமது காணியினுள் வேலைசெய்தனர். கால்வாய்களைத் தாமே வெட்டி வலைபின்னல் அமைப்பில் நீர்ப்பாசன வசதிகளைச் செய்தனர். உரிய போகத்துக்கான விதைகளைப் பகிர்ந்தளித்தனர். பலர் அனுபவப்பட்ட விவசாயிகள். அவர்களுக்கு விவசாய அமைப்புமுறை தெரியும். பயிரிடத் தொடங்கினர்.

பருவ மழை பெய்யும் காலம் அவர்களுக்குத் தெரியும். சில காலங்களே அவர்களுக்கு நெருக்கடியைக் கொடுக்கும். அதற்கு முகம் கொடுக்க அவர்களுக்குத் தெரியும்.

மூன்று மாதங்கள் உருண்டோடின. முத்தரையர் தளபதி நாகப்ப ரோடு குடியமர்த்தியவர்களைப் பார்வையிட வந்தார். சேனைச் செய்கையைக் கண்டு மெய்மறந்து இரசித்தார். காடாகக் காட்சியளித்த இடங்களா இவைகள்.? பொன்விளையும் பூமி. இது அந்நியர் வசம் ஆவதா? விடவே கூடாது. நமது நாடு நமக்கே உரியது. இங்கு அந்நியர் வந்து புகுவது என்ன நீதியோ? அப்படியே வந்தாலும் நாம் பாரத்துக் கொண்டு இருப்பதோ? அந்த பச்சைப்பசேல் என்று காற்றில் அசையும் பயிர்களைப் பாருங்கள். இந்த மகாவலி நீரினைப் பருகி, மகாவலியில் குதித்து நீச்சல் அடித்து, மணலில் புரண்டு, நிலவில் ஓடத்தில் பாடிப் பயணிப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு சுகமானது. யோசியுங்கள்." அனைவருக்கும் கேட்கும்படி முத்தரையர் முழங்கினார். மகாவலி எதிரொலித்தது.

கொட்டியாரக் குடாக்கடல் அடம்பன்கொடிகளால் போர்த்திக் கொண்டு படுத்திருந்தது. இரவும் பகலும் தங்கள் நிலத்தையும், பயிர்களையும் பார்த்து மகிழ்ந்து மகாவலியின் வீரமைந்தர்களாக வலம் வந்தனர். தளபதி நாகப்பர் தனது இளம் வீரர்களுக்குத் தனது பாசறையில் விருந்தளித்து வாழ்த்தினார். நீங்கள் இல்லையேல் இந்த மண்ணைப் பிறர் பிடித்து நம்மை அடிமைகளாக்கி ஆண்டிருப்பர்.

அந்த நேரத்தில் கண்டி அரசன் சௌரத்தின் வெற்றிக்காக உழைத்த மணிமாறனும், சுகுணனும் தங்கள் படைகளோடு கண்டி அரசனின் வாழ்த்துக்களோடும், பரிசில்களோடும், வந்து சேர்ந்தார்கள். மக்கள் ஆரவாரித்து மகிழ்ந்தனர். பெண்கள் மகிழ்ச்சியில் ஆற்றில் பாய்ந்து நீச்சலடித்து விளையாடினர்.

***

*(முற்றும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் ஏனைய சிறுவர்களுக்கான நூல்கள்

| இல. | நூலின்பெயர் | நூலின் வகை |
|---|---|---|
| 01 | இன்பக் கனிகள் | சிறுவர் பாடல் |
| 02 | பாட்டுப் பாடுவோம் | சிறுவர் பாடல் |
| 03 | காகமும் தம்பியும் | சிறுவர் பாடல் * |
| 04 | பாடி ஆடுவோம் | சிறுவர் பாடல் |
| 05 | கடலும் காவிரியும் | சிறுவர் பாடல் |
| 06 | சின்னச் சின்னப் பாட்டு | சிறுவர் பாடல் |
| 07 | மனதுக்கினிய பாட்டு | சிறுவர் பாடல் * * |
| 08 | ஆனந்தமான பாட்டு | சிறுவர் பாடல் |
| 09 | சகோதரராய் வாழ்வோம் | சிறுவர் பாடல் |
| 10 | இசையோடு அசைவோம் | சிறுவர் பாடல் * |
| 11 | தம்பிக்கொரு பாட்டு | சிறுவர் பாடல் |
| 12 | அறிவைத் தரும் பாடல்கள் | சிறுவர் பாடல் * * |
| 13 | இனிக்கும் பாடல்கள் | சிறுவர் பாடல் |
| 14 | அறிவொளிப் பாடல்கள் | சிறுவர் பாடல் |
| 15 | தங்கைக்கொரு பாட்டு | சிறுவர் பாடல் |
| 16 | ஆடிப்பாடும் பாடல் | சிறுவர் பாடல் * |
| 17 | பாங்குடன் பயில்வோம் | சிறுவர் பாடல் - |
| 18 | ஆடி மகிழ்வோம் | சிறுவர் ஆடலும் பாடலும் |
| 19 | தெரிந்து கொள்வோம் | சிறுவர் பாடல் - |
| 20 | கேளு கண்ணே கேளு | சிறுவர் பாடல் |
| 21 | ஆடத்தூண்டும் பாடல் | சிறுவர் பாடல் |

**சிறுவர் கதைகள்**

| | | |
|---|---|---|
| 01 | பூஞ்சிட்டுக்கள் | சிறுவர் கதைகள் |
| 02 | சின்னத் தேவதைகள் | சிறுவர் கதைகள் * |
| 03 | கண்ணனும் இராமனும் | சிறுவர் கதைகள் * |
| 04 | தங்க மாம்பழம் | சிறுவர் கதைகள் |
| 05 | சிறகு வைத்த கதைகள் | சிறுவர் கதைகள் |
| 06 | சாதனையாளர் | சிறுவர் கதைகள் * |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 07 | அற்புதமான வானம் * * | சிறுவர்அறிவியல் கதைகள் |
| 08 | பார்த்தேன் கதைகள் | சிறுவர் கதைகள் |
| 09 | மலைத்தேன் கதைகள் | சிறுவர் கதைகள் |
| 10 | சுவையான கதைகள் | சிறுவர் கதைகள் |
| 11 | சின்னச் சின்ன சிறுவர் கதைகள் | சிறுவர் கதைகள் * |
| 12 | சந்திரன் கதைகள் | சிறுவர் கதைகள் * |
| 13 | நிலாவில் நிலாமதி | சிறுவர் கதைகள் |
| 14 | சிந்தனைக் கதைகள் | சிறுவர் கதைகள் |
| 15 | முனிராஜன் கதைகள் | சிறுவர் கதைகள |
| 16 | வண்ணத்துப்பூச்சிகளும் சிறுவர்களும் | சிறுவர் கதைகள |
| 17 | மீனும் மனிதனும் | சிறுவர் கதைகள் |
| 18 | மரமும் கிளியும் | சிறுவர் கதைகள் |
| 19 | சிங்கத்தைச் சிறைப்பிடித்த சிலந்திகள். | சிறுவர் கதைகள். |

## வாழ்க்கை வரலாறு

| | | |
|---|---|---|
| 01 | வித்தகன் விபுலானந்தன் | சிறுவர் இலக்கியம் -சரிதை |
| 02 | கரம்பொன் தனிநாயகம் | சிறுவர் இலக்கியம் -சரிதை |
| 03 | சாதனைப் பெண்கள் | சிறுவர் இலக்கியம் |

## சிறுவர் கட்டுரை நூல்கள்

| | | |
|---|---|---|
| 01 | பேனாவினால் பேசுவோம் -1 | சிறுவர் கட்டுரைகள். |
| 02 | பேனாவினால் பேசுவோம் -11 | சிறுவர் கட்டுரைகள். |
| 03 | எழுதுவோம் வாசிப்போம் 8 -11 | சிறுவர் கட்டுரைகள். |
| 04 | மலரும் மொட்டுக்கள் 3 | சிறுவர் கட்டுரைகள். |
| 05 | மலரும் மொட்டுக்கள 4 | சிறுவர் கட்டுரைகள் |
| 06 | மலரும் மொட்டுக்கள் 5 | சிறுவர் கட்டுரைகள் |
| 07 | மனங்கவரும் மொட்டுக்கள் 6 | சிறுவர் கட்டுரைகள் |
| 08 | மனங்கவரும் மொட்டுக்கள்- 7 | சிறுவர் கட்டுரைகள் |
| 09 | அவிழும் மொட்டுக்கள் | சிறுவர் கட்டுரைகள் |
| 10 | தமிழ்த்தேன் துளிகள் | சிறுவர் கட்டுரைகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிறுவர் நாவல்

| | | |
|---|---|---|
| 01 | பளிங்குத் தீவு | சிறுவர் நாவல் |
| 02 | பயங்கொள்ளலாகாது பாப்பா | சிறுவர் நாவல் * * |
| 03 | காட்டில் கலவரம் | சிறுவர் நாவல் |
| 04 | உல்லாசப் பயணம் | சிறுவர் நாவல் * |
| 05 | மனதில் உறுதி வேண்டும் | சிறுவர்நாவல் * |
| 06 | அந்த மாணவர் உலகம் | சிறுவர் நாவல் |
| 07 | துணிச்சல் மிக்க சுந்தரி | சிறுவர் நாவல் |
| 08 | சுனாமி தந்த உறவு | சிறுவர் நாவல் |
| 09 | மகாவலியின் மைந்தன் | சிறுவர் நாவல் |
| 10 | எறும்புப் படை | சிறுவர் நாவல |

## English

| | | |
|---|---|---|
| 01 | *Butterflies and children* | *Children story* |
| 02 | *The man and the fish* | *Children story* |
| 03 | *The Tree and the parrot* | *Children story* |
| 04 | *The Elephants ahd ants* | *Children story* |
| 05 | *The Little Spider* | *Children story* |
| 06 | *The Crow and the Cuckoo* | *Children story* |
| 07 | *Essays for Little Children* | *Children Essays* |
| 08 | *Essays for Kids* | *Children Essays* |
| 09 | *Let's Read and Write Essays* | *Children Essays* |
| 10 | *A New Dawn of Essays* | *Children Essays* |

### ஆய்வு நூல்கள்

01 கிராமிய விளையாட்டுக்கள் - திருகோணமலை மாவட்டம்

### ஆய்வு – விளையாட்டு

02 கிராமியப் பாடல்கள் - திருகோணமலை மாவட்டம் ஆய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேணிப்பித்தன் அவர்கள்
திருகோணமலை ஆலங்கேணியைச் சேர்ந்தவர்.
ஐம்பது வருட காலத்திற்கு மேலாக
எழுத்துத் துறையில் தடம் பதித்தவர்.
ஈழத்திலே இலக்கியத்துறையில் நூற்றுக்கு மேற்பட்ட
நூல்களை வெளியிட்டு இமாலய சாதனை புரிந்தவர்.
ஆங்கிலத்திலும் எழுதும் வல்லமை கொண்ட இவரது
பத்துக்கு மேற்பட்ட ஆங்கில நூல்களும்
வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.
கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், ஆய்வு, என
இலக்கியத்தின் அனைத்துத் தளங்களிலும் தனது
முத்திரையை பதித்தவர். அதேவேளை சிறுவர்
இலக்கியத்திலும் அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களை
வெளியிட்டு சாதனை புரிந்தவர்.

- மகுடம் வி. மைக்கல் கொலின்

மகுடம்
ISBN: 978-624-5849-48-2
9 786245 849482
600.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org